பக்கங்கள் : பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 தை 06 ஞாயிற்றுக்கிழமை (20.01.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 55

## 13ஆவது அரசமைப்புச் சட்டத் திருத்தத்திற்கு

# துளியேனும் மாற்றமில்லாத அனைத்துக் கட்சி யோசனை!

## புதனன்று ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்படும்

கொழும்பு,ஜனவரி20

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம் அரசமைப்புச் சட்டத்துக்குக் கொண்டுவரப்பட்ட 13ஆவது சட்டத் திருத்தத்தில் உள்ள அதிகாரப் பகிர்வை விட, ஒரு சிறு துளியேனும் மாற்றமும் இல்லாத தீர்வு யோசனையையே எதிர்வரும் புதன்கிழமை அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழு ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கும்!

பேராசிரியர் திஸ்ஸ விதாரண தலைமையில் இயங்கும் அனைத்துக் கட்சிக் குழு, 1988ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட சட்டத் திருத்தத்திலிருந்து ஓர் அங்குலமேனும் முன்னே நகரவில்லை.

அத்திருத்தத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள அதிகாரப் பகிர்வை சரிவர நடைமுறைப்படுத்தல், ஏற்கனவே அமுல் செய்யப் பட்ட சரத்துக்களில் உள்ள நடைமுறைக் குறைபாடுகளை, குளறுபடிகளை எவ்வாறு களைவது, நேராக்குவது, சீராக்குவது என்பன போன்ற சில்லறை விடயங்களே அந்த யோசனையில் அடங்கி இருப்பதாக அனைத்துக் கட்சிக் குழுவுக்கு மிகவும் நெருங்கிய வட்டாரங்கள் உதயனுக்குத் தெரிவித்தன.

மொத்தத்தில் சட்டத் திருத்தத்தின் சரத்துக்களை எவ்வாறு முழுமையாகவும் திறம்படவும் நடைமுறைப்படுத்தலாம் என்ற வழிமுறைகளே, சிபார்சுகளே சமர்ப்பிக்கப்பட இருக்கும் யோசனையில் பிரதான இடம் வகிப்பதாக அதே வட்டாரங்கள் மேலும் கூறின.

1990ஆம் ஆண்டில் வடக்கு - கிழக்கு மாகாண சபை இயங்கத் தொடங்கிய பின்னர் அதிகாரப் பகிர்வு தொடர்பாக நடைமுறையில் உருவாகிய சிக்கல்கள், தடங்கல்களை நிவர்த்தி செய்வது குறித்தும் அ.க. குழுவின் யோசனையில் எடுத்துரைக்கப் பட்டுள்ளதாம்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத் தளபதி மணலாறுப் பகுதிக்கு நேற்று விஜயம்

கொழும்பு,ஜன.20

இராணுவத் தளபதி லெப்ரினன்ட் ஜெனரல் சரத் பொன்சேகா வன்னி மற்றும் மணலாறுப் பகுதிக்கு நேற்று சனிக்கிழமை விஜயம் செய்தார்.

அப்பகுதியில் காணப்படும் பாதுகாப்பு நிலைமைகளை கண்காணிப்பதே அவரது விஜயத்தினது நோக்கமாகும் என்று இராணுவத் தலைமையகம் தெரிவித்தது.

இராணுவத் தளபதியுடன் பல சிரேஷ்ட இராணுவ அதிகாரிகளும் அங்கு சென்றிருந்தனர்.

மணலாறு இராணுவப் படை முகாமுக்குச் சென்ற குழுவினரை பிரிகேடியர் மொஹான்

(12ஆம் பக்கம் பார்க்க)

### தெரிவுக்குழு சமர்ப்பிக்கும்

## அதிகாரப் பகிர்வு யோசனையை நிறைவேற்ற அரசு திடசங்கற்பம்

### ஜனாதிபதி பி.ரி.ஐக்குத் தகவல்

கொழும்பு,ஜன.20


அனைத்துக்கட்சித் தெரிவுக் குழு எதிர்வரும் புதன்கிழமை சமர்ப்பிக்கும் தீர்வு யோசனையில் தெரிவிக்கப்படும் அதிகாரப் பகிர்வு(Power Sharing) திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் அரசு மிகவும் உறுதியாக உள்ளது.

இவ்வாறு பி.ரி.ஐ. என்ற இந்திய செய்திச் சேவைக்கு நேற்றுத் தகவல் தெரிவித்திருக்கிறார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது-

இனப்பிரச்சினைக்குத் தீர்வாக அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழு முன்வைக்கும் அதிகாரப் பகிர்வுக்கான தீர்வு யோசனை ஓர் இடைக்கால ஏற்பாடே ஆகும்.

அனைத்துக்கட்சிப் பிரதிநிதிகள் குழு என்னிடம் சமர்ப்பிக்கும் தீர்வுப் பொதி அமைச்சரவையின் பரிசீலனைக்கு வைக்கப்படும். அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்ததும் அதனை நாடாளுமன்றில் சமர்ப்பிப்போம். (12ஆம் பக்கம் பார்க்க)



மேலே காணப்படுவது குட்டி வெளவாலா என்று ஆச்சரியத்துடனும் சந்தேகத்துடனும் படத்தை உன்னிப்பாகப் பார்க்கிறீர்களா? அதுதான் இல்லை. இது ஓர் இராட்சத வண்ணத்துப் பூச்சி.

முட்டைகளை இடுவதற்காக பறந்துவந்த இந்த வண்ணத்துப்பூச்சி, இலையின் கீழ்ப்புறமாக ஓய்வெடுத்தபோது 'கமெரா'வில் சிக்கிக்கொண்டது.

நல்லூர் மனோன்மணி அம்மன் ஆலயப் பகுதியில் வசிக்கும் உதயன் அபிமானி ஒருவரின் வீட்டிலேயே இந்த வண்ணத்துப்பூச்சி நேற்றுமுன்தினம் தென்பட்டது. (படம் : கண்ணன்)

## 23ஆம் திகதியின் பின்னரும் அ.க. குழு கூடுமாம்

கொழும்பு,ஜன.20

அதிகாரப்பரவலாக்கல் தொடர்பாக எதிர்வரும் புதன்கிழமை ஜனாதிபதியிடம் அறிக்கை சமர்பித்தாலும் தொடர்ந்து அனைத்துக் கட்சித் தெரிவுக் குழுவின் அமர்வுகள் இடம்பெறும்.

அக்குழுவின் தலைவரும் அமைச்சருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தெரிவுக்குழுவில் ஆராயப்பட்ட விடயங்கள் அடங்கிய தீர்வுத்திட்ட அறிக்கை ஜனாதிபதியிடம் புதன்கிழமை கையளிக்கப்படும்.

அதன் பின்னர் இந்த தீர்வுத்திட்டத்தை

(12ஆம் பக்கம் பார்க்க)

## மொனறாகலை காட்டுப் பகுதியில் கொமாண்டோப் படை தேடுதல்!

கொழும்பு,ஜன.20

மொனறாகல காட்டுப் பகுதியில் பாரிய தேடுதல் நடவடிக்கையை படையினர் நேற்றுக்காலை ஆரம்பித்துள்ளனர்.

ஆயிரத்துக்கும் மேற்பட்ட கொமாண்டோ படையினர் இத்தேடுதலில் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர் என்று படைத்தரப்புத் தெரிவித்தது.

கடந்த செவ்வாய்க்கிழமை தொடக்கம் காட்டுப் பகுதியில் விடுதலைப் புலிகள் மேற்கொண்டுவரும் தாக்குதல்களை முறியடிப்பதற்காகவும் -

அக்காட்டுப்பகுதிக்குள் ஊடுருவிய 10 இற்கும் 15இற்கும் இடையிலான எண்ணிக்கையுடைய புலிகளின் குழுவை தேடி அழிக்கவும் - இத்தேடுதல் ஆரம்பிக்கப் பட்டுள்ளது என பாதுகாப்புத் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.(12ஆம் பக்கம் பார்க்க)

## 15 சுயேச்சைக் குழுக்கள் கட்டுப்பணம் செலுத்தின

மட்டக்களப்பு,ஜன.20

கிழக்கில் இடம்பெறவுள்ள 9 உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் போட்டியிடுவதற்காக இதுவரை 12 சுயேச்சைக் குழுக்கள் தமது கட்டுப் பணத்தைச் செலுத்தியுள்ளன.

நேற்றுமுன்தினம் 18ஆம் திகதியிலிருந்து வேட்பாளர்கள் தமது வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்யலாம் என அறிவிக்கப்பட்டிருந்தது. (12ஆம் பக்கம் பார்க்க)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மக்கள் வங்கி சங்கானைக் கிளையின் புதிய கட்டடத் திறப்புவிழா நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. புதிய கட்டடத்தை வங்கியின் வட பிராந்திய முகாமையாள் ரி.கே.ஆனந்தராசா நாடா வெட்டித் திறந்து வைப்பதை முதலாவது படத்திலும் - வங்கியின் முகப்புத் தோற்றத்தை இரண்டாவது படத்திலும் காணலாம். *(படங்கள்: சங்கானைச் செய்தியாளர்)*

## சாந்தை விநாயகர் சனசமூக நிலையக் கட்டடம் திறக்கப்பட்டது

வலி.தென்மேற்கு,ஜன.20

சில்லாலை சாந்தை விநாயகர் சனசமூக நிலையம் மற்றும் கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடம் 'கமநெகும' திட்டத்தின் கீழ் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

இக்கட்டடத்தின் திறப்புவிழா கடந்த செவ்வாய்க்கிழமை நிலையத் தலைவர் க.நாகரத்தினம் தலைமையில் நடைபெற்றது.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் பிரதேச செயலக அபிவிருத்தி ஒருங்கிணைப்பாளர் திருமதி பொன்மதி சிவகுமாரன் கலந்து கொண்டு கட்டடத்தை சம்பிரதாய பூர்வமாக நாடாவெட்டித் திறந்து வைத்தார்.

வலி.தென்மேற்கு பிரதேச சபை பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலக பொறுப்பதிகாரி ஞா.தேவச்சந்திரன், பண்டத்தரிப்பு பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளர் கி. குணரத்தினம் ஆகியோரும் இவ்விழாவில் விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். (202-135)

## சொற்பொழிவாளர் கௌரவிப்பு

கரவெட்டி,ஜன.20

வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் கடந்த இரு வருடங்களுக்கு மேலாக இராமாயண தொடர் சொற்பொழிவாற்றி வரும் பொன் சுகந்தன் ஆலய ஆச்சிரமத்தினரால் கடந்த ஞாயிற்றுக்கிழமை கௌரவிக்கப்பட்டார்.

இக்கௌரவிப்பு நிகழ்வில் பிரதம விருந்தினராக பேராசிரியர் கலாநிதி அ.சண்முகதாஸ் கலந்துகொண்டு சொற்பொழிவாளருக்கு 'தமிழ்ஞான வித்தகர்' என்னும் பட்டத்தை வழங்கிக் கௌரவித்தார். (202-70)

## மேர்வின் ரகளை விவகாரம்: சந்தேக நபருக்குப் பிணை!

கொழும்பு,ஜன.20

அமைச்சர் மேர்வின் சில்வாவுடன் 'ரூபவாஹினி' பணிமனைக்குள் புகுந்து ரகளை நடத்திய விவகாரம் தொடர்பாகக் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த சந்தேகநபரை பிணையில் விடுவிக்க அனுமதி வழங்கியது கொழும்பு பிரதம நீதிவான் நீதிமன்றம்.

இந்த விவகாரத்தை ஒட்டிய வழக்கு நேற்றுமுன்தினம் கொழும்பு பிரதம நீதிவான் நிஷாந்த ஹப்பு ஆராய்ச்சி முன்னிலையில் எடுக்கப்பட்ட போதே நீதிமன்றம் இந்த அனுமதியை வழங்கியது.

உதய நுவன் குணதாஸ என்ற மேற்படி சந்தேகநபரை பத்தாயிரம் ரூபா காசுப் பிணையிலும், இரண்டு லட்சம் ரூபா சரீரப் பிணையிலும் செல்ல அனுமதித்த நீதிவான், சந்தேக நபரின் கடவுச்சீட்டை நீதிமன்றத்தில் ஒப்படைக்கும்படியும், சந்தேக நபர் இவ்வழக்கின் சாட்சிகளை அச்சுறுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாது என்றும் உத்தரவிட்டார்.

வழக்கு பெப்ரவரி 22ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (சி)

## இனவிருத்திக்குரிய சேவல்கள் விற்பனையில்

யாழ்ப்பாணம், ஜன.20

அச்சுவேலியில் உள்ள பிராந்திய கோழிப் பண்ணையில் நாலரை மாதம் நிரம்பிய இன விருத்திக்குரிய நல்லின சேவல்கள் ஒரு கிலோ 500 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுகின்றன என கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் தெரிவித்தார். (202)

## வவுனியாவில் குடும்பப் பெண் சுட்டுக்கொலை!

கொழும்பு, ஜன.20

வவுனியா,பூவரசங்குளம் பகுதியில் கடந்த வியாழக்கிழமை இரவு 9.15 மணியளவில் குடும்பப்பெண் ஒருவர் இனந் தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். அந்தப் பகுதியைச் சேர்ந்த மேரி என்ற பெண்ணே கொலையுண்டதாகக் கூறப்பட்டது.

சம்பவம் தொடர்பில் வவுனியாப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (சி)

## மாவையில் செவ்வாயன்று தைப்பூசத் திருவிழா நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஜன.20

சரித்திரப் பிரசித்தி பெற்ற மாவைக்கந்தன் ஆலயத்தில் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை தைப்பூசத் தினத்தன்று காலை 8 மணி முதல் விசேட நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

காலை தொடக்கம் பிற்பகல் 3.30 மணிவரை அபிஷேகம், விசேட பூசைகள், புதிர்ப் பூசைகள், விசேட அர்ச்சனைகள், சுவாமி வீதியுலா வருதல் என்பன இடம்பெற்று தொடர்ந்து தான தர்மங்கள், சண்முக அர்ச்சனை என்பன இடம்பெறும்.

இவற்றைத் தொடர்ந்து மகேஸ்வர பூசை இடம்பெறும். பக்தர்கள் தைப்பூச நிகழ்வுகளில் கலந்து கொள்வதற்கு வசதியாக தெல்லிப்பழை சோதனை நிலையத்தில் இருந்து மாவிட்டபுரம் ஆலயம் வரையிலான பயண ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன என்று ஆதீனகர்த்தா மஹாராஜஸ்ரீ சு.து.ஷண்முகநாதக் குருக்கள் தெரிவித்துள்ளார். (203)

### விற்பனைக்கு

1½ மாத கறுப்பு நிற உயர்ந்த இன அல்ஷேசன் கிறேடன் நாய்க்குட்டி களும் பாரிய புளிய மரமும் விற்பனைக்குண்டு. தொடர்பு: *197, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.* தொ.பே.இல.: 222 5283

This Week Special Offer

Mother Boards
intel Processor
Hard Disks ( ID and Sata)
DDR1, DDR2, Ram
Optical Disc Drive
Combo,DVD -RW
Monitors - CRT 17", 15", LCD
Flash (1,2,4 GB)
Printer, UPS, Scanner
hp Toner (No 1)
Printer Ribbon,Cartridges

Intel pentium4 3.0Ghz/2m,
Asus Motherboard,
512 DDR 2, 80GbHard Disk,
Combo Drive,
ATX Case with SMPS,
17" CRT Monitor,
Keyboard & Optical Mouse.

Free Hp Deskjet Printer

MP 3 PLAYER

[இலங்கையில் hp முகவரினால் அங்கீகரிக்கப்பட்டது]

All types of Computer Service & Repeairs

சகல விதமான கணனி உதிரிப்பாகங்களை ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ளலாம்.

Warranty 1 & 3 Years With Servise

திருமுருகன் கொம்நெற்

259 கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.021 222 7835
(ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் முன்பாக)

### மனமார வாழ்த்துகின்றோம்

*இலங்கை வங்கியின் சுன்னாகம் கிளை,*
*சுன்னாகம் வாழ்மக்களின் தேவைகளை உணர்ந்து,*
*வங்கி நாடாளாவிய*
*கணனி வலைப்பின்னலுடன்*
*இணைக்கப்படுவதையிட்டு மிகவும்*
*மகிழ்ச்சியடைகின்றோம்.*
*மேற்படி வங்கி, எமது கிராமத்தை*
*இலங்கை வங்கிக் கிராமமாக மக்கள்*
*எண்ணிப் போற்றும் அளவிற்கு தரமுயரக்*
*காரணமாகவிருந்த வங்கி முகாமையாளரையும்*
*மற்றும் சகல ஊழியர்களையும் மனமார*
*பாராட்டி வாழ்த்துகிறோம்.*

**கலைவாணி சனசமூக நிலையம்,**
**மின்சார நிலைய வீதி, சுன்னாகம் தெற்கு,**
**சுன்னாகம்.**

## பண்ணை வீதி புனரமைப்பு

யாழ்ப்பாணம்,ஜன.20

யாழ்.முற்றவெளிப் பகுதியில் தனியார் மினிபஸ் தரிப்பிடத்திற்கு முன்பாக செல்லும் பண்ணை வீதியைப் புனரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.இந்த வீதியில் சேதமடைந்த பகுதிகள் தார் ஊற்றி புனரமைக்கப்பட்டு வருகின்றன. (202-224)

## உள்ளூர் உற்பத்தியைக் கொண்டு சத்துணவு தயாரிப்பு

வலி.தென்மேற்கு, ஜன.20

மாதகல் மகளிர் கிராம அபிவிருத்தி சங்கம் உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட பயறு, உழுந்து, கௌபி, எள் ஆகியவற்றைக் கொண்டு சத்துணவு தயாரிக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றது.

இதற்குத் தேவையான சமையல் பாத்திரங்கள் மற்றும் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளதுடன், பெறுமான அதிகரிப்பு தொடர்பான பயிற்சியும் சங்க உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாக கீரிமலை கமநல சேவை நிலைய பிரிவு விவசாய போதனாசிரியர் திருமதி.ப. மணிவர்மன் தெரிவித்தார்.

இதேவேளை, பண்டத்தரிப்பை சேர்ந்த பெண் ஒருவருக்கு குரக்கன் மாவிலிருந்து பிஸ்கட் உற்பத்தி செய்வதற்கான பயிற்சியும் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (202-135)

## மரண அறிவித்தல்



### *நமசிவாயம் தில்லைநாதன்*

(பொடிகாட் தியாகு)

காரைநகர், பலகாட்டை பிறப்பிடமாகவும் வியாவிலை வதிவிடமாகவும் கொண்ட நமசிவாயம் தில்லைநாதன் நேற்று(19.01.2008) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நமசிவாயம் நாகம்மா தம்பதியரின் புதல்வனும் செல்லத்துரை - சரஸ்வதி தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற பரமேஸ்வரி மற்றும் இராசேஸ்வரியின் அன்புக் கணவரும் மகேந்திர ராசா (சுவிஸ்), மோகனாம்பாள், மீனாம்பாள், கஜேந்திரராசா, காலஞ் சென்ற நாகதர்சினி ஆகியோரின் அன்புத் தந்தையும் கலாதேவி, காலஞ்சென்ற கனகலிங்கம், ஜெயநேசன்(வவுனியா) ஆகியோரின் அன்பு மாமனாரும் திரவியன், அர்ச்சனா, டக்ஷயன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.01.2008) திங்கட்கிழமை காலை 9 மணிக்கு காரைநகரில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நீலகிரி இந்து மாயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வியாவில்,*
*காரைநகர்.*

தகவல்:
தி.இராஜேஸ்வரி
(மனைவி)



யாழ்ப்பாணக் குடாநாட்டில் யாழ்ப்பாணம் இலங்கை வங்கிக்கு அடுத்ததாக இருந்து கருமமாற்றும் வங்கி இலங்கை வங்கி சுன்னாகம் கிளை ஆகும். இன்று நாடளாவிய ரீதியில் கணனி மயமாக இணைக்கப்படுதல் பெருமகிழ்ச்சி தருகிறது. இவ் வங்கிப் பணியில் இலங்கை வங்கி சுன்னாகம் கிளை மென் மேலும் மேலோங்கி வளர எல்லாம் வல்ல துர்க்காதேவியைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

**Dr** .செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

I. C. B. S
20.01.2008
BOC
CHUNNAKAM

கணனி வலைப்பின்னல் சேவையில் இன்று காலை 9.30 மணியளவில் காலடி எடுத்து வைக்கும் இலங்கை வங்கி சுன்னாகம் கிளையை மேன்மேலும் வளர வாழ்த்துகிறோம்.

PC POWER UNIT

356B, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
Email - pcpowerunit@yahoo.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயன்தரும் உருப்படியான தீர்வு யோசனையை முன்வைக்க வலுவற்ற அனைத்துக்கட்சிக் குழு!

இலங்கையின் இனப்பிரச்சனைக்குத்தீர்வு காண்பதற்கான அதிகாரப் பகிர்வு யோசனைகளைச் சமர்ப்பிக்குமாறு கோரிஜனாதிபதியால்நியமிக்கப்பட்ட அனைத்துக்கட்சிப் பிரதிநிதிகள் குழு இதுவரை காலமும் ஒத்த கருத்திணக்கம் உருவாகாத காரணத்தால் தனது அறிக்கையைச் சமர்ப்பிக்கக் காலத்தை இழுத்தடித்து வருகிறது.

பற்பல வெளிநாட்டு, உள்நாட்டுத் தரப்புக்களது அழுத்தங்கள் காரணமாக, இம் மாதம் 23ஆம் திகதிக்கு முன்னர் யோசனைகளைச் சமர்ப்பிக்குமாறு ஜனா திபதி மஹிந்த ராஜபக்ஷ, அனைத்துக்கட்சி பிரதிநிதிகள் குழுவைக் கேட் டுள்ளார்.

அதே சமயம் குறிப்பிட்ட இந்த அனைத்துக்கட்சிப் பிரதிநிதிகள் குழுவைக் கலைத்து விடுமாறு அரசுக்கு அழுத்தம் கொடுக்க ஆரம்பித் துள்ளது ஜே.வி.பி..

இவை குறித்து அலசுகிறது இக் கட்டுரை.''ராவய'' பத்திரிகையில் பிரசுரமாகிய கட்டுரையின் தமிழ் வடிவம் இங்கே தரப்படுகிறது.

குறிப்பிட்டதொருகால இடைவெளிக்குப் பின்னர், சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் மீது மீண்டும் ஒரு தடவை ஒளிக்கதிர்கள் பாய்ந்து பரவ ஆரம்பித்துள்ளன. மழை பெய்யும் காலத்தில் பயன்படுத்திக் கொள்ளும் நோக்கத் தில், வாசற்கதவின் ஓரத் தில் தயாராக மடித்து வைக்கப்படும் குடையொன்றை ஒத்த அந்த அனைத்துக்கட்சிப் பிரதிநிதிகள் குழுவின் செயற்பாடுகளை மீண்டும் தூசி தட்டிக் கையிலெடுத்துப் பயன்படுத்த அரசு இன்று ஆர்வம் காட்டுவதற்கு, எதிர்வரும் நாள்களில் பெய்யக் கூடுமென அரசு எதிர்பார்க்கும் சர்வதேச ரீதியிலான அழுத்தங்கள் என்ற மழையால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களிலிருந்து தன்னைப் பாதுகாத்துக்கொள்ளும் முன்னெச்சரிக்கை உணர்வே காரணமாகும்.

இலங்கை சுதந்திரமடைந்து 60 ஆண்டுகள் பூர்த்தியாவதை முன்னிட்டு எதிர் வரும் பெப்ரவரி மாதம் நான்காம் திகதி கொண்டாடப்படவுள்ள சுதந்திரதினக் கொண்டாட்ட நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு இந்தியப் பிரதமருக்கு இலங்கை அரசு விடுத்த அழைப்பு இந்தியப் பிரதமரால் நிராகரிக்கப்பட்ட சம்பவத்தை இதற்கு மிகப் பொருத்தமான


**அஜித் பரகும் ஜயசிங்க**

தொரு உதாரணமாகக் குறிப்பிட இயலும். இலங்கையின் சுதந்திர தினக்கொண்டாட்டத்தில் தாம் கலந்துகொள்ள ஒப்புக் கொள்வது, தமிழ் நாட்டில் வாழும் தமிழ் மக்களுக்கு வெறுப்பையும் கோபத்தையும் ஏற்படுத்தக் காரணமாக அமையக் கூடுமென இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் கருதினார். எனவே இலங்கை அரசால் தமக்கு விடுக்கப்பட்ட அழைப்பை நிராகரிப்பதற்குப் பொருத்தமானதொரு காரணமாக அவர் இலங்கை அரசுக்கு நிபந்தனை யொன்றை முன்வைத்தார். அதாவது, எதிர்வரும் இலங்கையின் சுதந்திரதினக் கொண்டாட்டத்துக்கு முன்னர், இலங்கை அரசு, நாட்டின் இனப் பிரச்சினை தீர்வுக்கான தனது யோசனைகளைப் பகிரங்கப்படுத்த வேண்டும் என்பதே இந்தியப்பிரதமரால் முன்வைக்கப்பட்ட அந்த நிபந்தனையாகும்.

மேற்குறிப்பிட்ட இறுக்குப்பிடி காரணமாக இந்தத்தடவை மஹிந்த ராஜபக்ஷ வசமாக மாட்டிக் கொள்ளப்போகிறார் எனவும், பரந்த வகையிலான அதிகாரப்பரவலாக்க யோசனை யொன்றை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்வைக்க நேருமெனவும பலர் நம்பத் தலைப்பட்டனர். ஆனால் இது மற்றொரு ஏமாற்று என்று மட்டுமே எம்மால் கூறமுடிகிறது.

அனைத்துக்கட்சிப்பிரதிநிதிகள் குழுவால் தயா ரிக்கப்படும் தீர்வு யோசனைகள் 2006 ஆம ஆண்டின் டிசெம்பர் மாதத்தில் வெளியிடப்படுமென முன்னரும் கூட இலங்கை அரசு, இந்திய அரசுக்கு உறுதியளித்திருந்தது. இந்திய வெளியுறவு அமைச்சர் பிரணாப் முகர்ஜி, 'சார்க்' மகாநாட்டில் கலந்து கொளவதற்கான உத்தியோகபூர்வ அழைப்பை இலங்கை அரசுக்குக் கையளிப்பதற்காக இலங்கைக்கு விஜயம் செய்த வேளையிலேயே இலங்கை அரசு மேற்குறித்த உறுதிமொழியை வழங்கியிருந்தது. பின்னர் ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷ, 'சார்க்' மகாநாட்டில் கலந்து கொள்ளச் செல்லும் வேளையில், குறிப்பிட்ட தீர்வு யோசனைகள் வெளியிடப்படுமெனத் தெரிவிக்கப்பட்டது. ஆயினும் அவ்விதம் இலங்கை அரசால் எத்தகையதொரு தீர்வுத்திட்டமும் வெளியிடப்படவில்லை. இந்தத் தடவையும் கூட அத்தகைய தீர்வுத்திட்டமெதுவும் சமர்ப்பிக்கப்படப் போவதில்லை.

இந்தியாவிடமிருந்தோ, அமெரிக்காவிடமிருந்தோ,ஐரோப்பிய ஒன்றியத்திடமிருந்தோ, அல்லது ஐ.நா.சபையிடமிருந்தோ, அனைத்துக்கட்சிப் பிரதிநிதிகள் குழுவின் தீர்வு யோசனைகள் சமர்ப்பிக்கப்படாதமை குறித்து குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படும் சந்தர்ப்பங்களிலெல்லாம், சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் தலைவர் திஸ்ஸவிதாரணவை விரைவாக அந்தக் குழுவின் யோசனைகளைச் சமர்ப்பிக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தாம் கேட்டுக் கொண்டுள்



ளதாகப் பத்திரிகைகள் மூலம் பகிரங்கப்படுத்தும் நடைமுறையையே ஜனாதிபதி கைக்கொண்டுவருகிறார். இலங்கை சமசமாஜக் கட்சியின் தேசியப்பட்டியல் மூலம் நாடாளுமன்ற உறுப்பினராகி, அமைச்சர் பதவியையும் ஏற்றுச் செயற்படும் அனைத்துக் கட்சிப்பிரதிநிதிகள் குழுவின் தலைவர் திஸ்ஸ விதாரணவும், ஜனாதிபதியின் அத்தகைய அறிவுறுத்தலையடுத்து, அவசர அவசரமாகச் அனைத்துக்கட்சிப் பிரதிநிதிகள் குழுவைக்கூட்டி தீர்வு யோசனைகளைச் சமர்ப்பிக்கும் முயற்சிகளை மேற்கொள்வது வழக்கமாக ஆகிப்போய்விட்டது. ஒரு சில நாள்களில் சம்பந்தப்பட்ட சகலரும் அதனை மறந்து விடுவதும் வழக்கமாகி விட்டுள்ளது. அதே சமயம், சர்வதேச சமூகமும் கூட குறிப்

## மழைக்குக் கையில் எடுக்கப்படும் குடைபோல கூடிக்கலைந்த குழுக்களின் முடிவே இதற்கும்

பிட்ட சில மட்டுப்படுத்தல்களுடன் தொடர்ந்தும் இலங்கைக்கு யுத்த உதவிகளை வழங்கி வருகின்றது.

அனைத்துக் கட்சிப்பிரதிநிதிகள் குழுவுக்குள்ளேயே இனவாத கடுங்கோட்பாட்டுத் தரப்பினரும் அங்கம் வகிப்பதன் காரணமாகவே அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவால் அதிகாரப் பகிர்வு தொடர்பாக யோசனையொன்றை முன்வைக்க இயலாது போயுள்ளது. நாட்டின் இனங்களுக்கிடையிலான பிரச்சினைக்கு அரசியல் ரீதியிலான தீர்வொன்றைக் காண்பதற்கான அபிலாஷையின் அடிப்படையில் அம் முயற்சி வழி நடத்தப்படாமையே இவற்றுள் முக்கியமான இலட்சணமொன்றாகக் கொள்ளப்படத் தக்கதாகும்.

அரசுடன் தொடர்புடைய கூட்டணித் தரப்பின் இத்தகைய இறுக்கமான இலட்சணம் காரணமாகவே சர்வகட்சிப்பிரதிநிதிகள் குழுவால் இனப்பிரச்சனைக்கான அரசியல் தீர்வுயோசனை குறித்து இணக்கப்பாடொன்றை எட்ட இயலாது போயுள்ளது. அதற்கான திறன் அக்குழுவுக்குக் கிடையாது எனக் கூற வேண்டியுள்ளது. இந்நாட்டில் இனப்பிரச்சனை நிலவு வதாகக் கூட ஏற்க முன்வராத ஜாதிக ஹெல உறுமய மற்றும் எந்த விதத்திலான அதிகாரப் பகிர்வு யோசனைக்கும் கூட இணங்க முன்வராத ஜே.வி.பி., ஆகிய தரப்புக்கள் அரசின் இருப்புக்கு முட்டுக் கொடுக்கும் பலத்தைப் பெற்றிருக்கும் இன்றைய இந்நாட்டின் அரசியல் பின்னணி நிலையில், அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவால் இனப்பிரச்சனைத் தீர்வுக்கான யோசனை யெதையும் முன்வைக்க இயலாது என்பது பிரதட்சணமாகியுள்ளது. அத்தகைய தீர்வு யோசனைகளைத் தயாரித்த அந்த அனைத்துச் சர்வ கட்சிப் பிரதிநிதிகள் குழு தமது குழுவின் யோசனைகளுடன்செயலற்றுப்போக நேர்வதே இறுதியில் இம்முயற்சியின் பலா பலனாக ஆகிவிடப் போகிறது.

இவை மட்டுமல்லாது கடந்து காலகட்டங்களில் இலங்கை ஆட்சித் தரப்புக்களால், நாட்டின் இனப்பிரச்சனைக்கான தீர்வு முயற்சிகள் என்ற விதத்தில் முன்னோக்கி எடுத்துச் செல்லப்பட்ட சகல முயற்சிகளையும் - அம் முயற்சிகள் எட்டிய மட்டங்களிலிருந்து அவற்றைப் பின்னோக்கித் தள்ளிச் சென்று ஆரம்ப இடத்திலேயே நிறுத்தி வைக்கும் கைங்கரியத்தையே குறிப்பிட்ட இந்த இனவாத, கடுங்கோட்பாட்டுத்தரப்புக்கள் மேற்கொண்டு முடித்துள்ளன எனக் குறிப்பிடுவது எந்த விதத்திலும் தவறாகிவிடாது. 1987 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட இந்திய-இலங்கை ஒப்பந்தம் மூலமாக ஒன்றிணைக்கப்பட்ட வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களது நிர்வாகத்தை மீண்டும் வெவ்வேறு நிர்வாக அலகுகளாகப் பிரித்துவைத்தமை, 2003 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட போர் நிறுத்த உடன்பாட்டிலிருந்து அரசைக் கொண்டு ஒரு தலைப்பட்சமாக விலகிக் கொள்ள வைப்பித்தமை, மற்றும் நாட்டின் முக்கிய இரு அரசியல் கட்சிகளான சுதந்திரக் கட்சி மற்றும் ஐ.தே.கட்சி ஆகியவற்றை சமஷ்டி முறையிலான நிர்வாகம் என்ற கொள்கை நிலைப்பாட்டை கைவிடவைப்பித்தமை ஆகிய இவையாவும் மேற்குறிப்பிட்ட அந்த இரு இனவாதக் கடுங்கோட்பாட்டுத் தரப்புக்களது கைங்கரியங்களே ஆகும்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உட்பட இந்த அதிகாரக் கூட்டுத் தரப்புக்களது முக்கிய அபிலாஷை தமது அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்வதேயல்லாது, நாட்டின் வேறெந்தவொரு பிரச்சினைக்கும் தீர்வு தேடித் தருவதல்ல. அந்த வகையில் நாட்டின் பிரச்சனைகள் இத்தரப்பினர்களைப் பொறுத்தவரை அதிகாரத்தை முன்னெடுக்கும் பாதையில் குறுக்கிடும் தடைக்கற்கள் போன்றவையே. அந்தவகையில், நாட்டின் இனப்பிரச்சினை என்ற விடயம் கூட அத்தரப்பினரின் பார்வையில் மேற்குறிப்பிட்ட தடையொன்றாகவே கருதப்படுகிறது. அதுமட்டுமன்றி அரசு, இத்தகைய பிரச்சினைகள் என்ற தடைக்கற்களிலிருந்து விலகி, மேற்கொண்டும் தனது பயணத்தைத் தொடர்ந்து மேற்கொள்ளும் விதத்தில் செயற்பட முனைகிறதேயன்றி, பிரச்சினைகள் என்ற தடைக்கற்களை அகற்றிவிடும் வகையில் தீர்வேதும் காண முயலும் வகையில் செயற்பட விழைவதாகத் தோன்றவில்லை.

யுத்தத்தின் மூலம் இந்நாட்டின் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியும் என நம்பும் அளவுக்கு அரசு ஒரு சிறு குழந்தையல்ல. அதிகாரத்தைத் தொடர்ந்தும் தக்க வைத்துக் கொள்வதற்காக யுத்தத்தை ஒரு கருவியாகப் பயன்படுத்திக் கோஷமெழுப்பும் தரப்புக்கள் மேற்கொள்ளும் தூண்டுதல் மற்றும் அழுத்தம் என்பவை காரணமாகவே, அரசு தனது இருப்பை உறுதிப்படுத்த ஆதரவளித்துவரும் அக்கடுங்கோட்பாட்டுத் தரப்புக்களின் பேச்சுக்கு எடுபட்டு, தானும் யுத்த பேரிகை முழங்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. அத்தோடு தனது நிர்வாகச் செயற்பாடுகளின் நலிவுநிலை காரணமாக உருவாகும் சிக்கல்களிலிருந்தும் விடுபட, [illegible] உருவாகும் அதிருப்தி நிலையைத் திசை திருப்ப 'யுத்தம்' என்ற விடயம் அரசுக்கு வசதியான ஆயுதமொன்றாக அமைந்து விட்டுள்ளது.

''இந்த அரசு தவறு எதுவுமின்றி, சரியாக நிறைவேற்றிவரும் ஒரேயொரு செயற்பாடு, அழுத்தங்களுக்குத் தலைசாய்க்காது விடுதலைப்புலிகளுக்கு எதிராக யுத்தத்தை முன்னெடுத்து வருவதேயாகும்,' என அண்மையில் ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒருவரான லால்காந்த, தொழிற்சங்கங்களின் சம்மேளனக் கூட்டமொன்றில் பேசுகையில் கருத்து வெளியிட்டிருந்தார். ஏனைய சகல பிரச்சினைகளையும் பின்தள்ளி வைத்து, அரசின் இருப்பைக் காப்பாற்றுவதற்கு ஜே.வி.பி. முன்வந்து செயற்படுவதை, பொது மக்கள் முன்னால் நியாயப்படுத்திக் கொள்ள ஜே.வி.பி. எடுத்துள்ள ஆயுதமும் இந்த யுத்தம் என்பதேயாகும்.

அரசு தேர்ந்தெடுத்துள்ள இந்த யுத்த வழியை தடுத்து நிறுத்தத்தக்க திறன் விடுதலைப் புலிகள் அமைப்பிடம் மட்டுமே காணப்படுகிறது. அதற்காக தமது தாக்குப் பிடித்துப் பொறுமை காக்கும் தன்மை, மற்றும் எதிர்த் தாக்குதல் மேற்கொள்ளும் தன்மை என்பவை குறித்து விடுதலைப் புலிகள் அமைப்பு மீளாய்வு செய்துபார்க்க வேண்டியுள்ளது.

மஹிந்த ராஜபக்ஷவின் அரசு என்பது, சர்வதேச அரசியல் வரலாற்றில், கிளித்தட்டு விளையாட்டில் கெட்டித்தனம் மிக்கதொரு தீவிர சக்தியேயாகும். ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழு மகாநாட்டில் இலங்கைக்கு எதிராகக் கொண்டு வரப்படவிருந்த கண்டனத் தீர்மானத்தைத் தடுத்து நிறுத்துவதில் வெற்றி கண்டமை, அமெரிக்கா, ஐரோப்பிய சமூகம் மற்றும் இந்தியா போன்ற நாடுகள், இலங்கைக்கு யுத்ததுக்கான உதவிகளௌதனையும் வழங்குவதில்லை என எடுக்கவிருந்த தீர்மானத்தைத் தடுத்து நிறுத்துவதற்காக சீனா, பாகிஸ்தான், மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளிடம் ஆயுத உதவிகளைப் பெற்றுக்கொள்ளப் போவதான தோற்றத்தை உருவாக்கி, அதன்மூலம் மேற்குலகம் மற்றும் இந்தியா என்பவற்றுக்கு அழுத்தத்தை மேற்கொண்டமை என்பவற்றை இலங்கை அரசின் இத்தகைய கிளித்தட்டு விளையாட்டின் வெற்றிகளாக முன்வைக்கமுடியும்.

நாட்டின் அரசியல் மோதல்களைக் குறைத்து மதிப்பிடும் விதத்தில், இராணுவத் தரப்பின் மீது அளவுக்கு அதிகமாக சுமத்தப்பட்டிருக்கும் தமிழர் தரப்பு மோதல்களின் நலிவுத் தன்மை, மஹிந்த ராஜபக்ஷவுக்கு சர்வதேச அரசியல் நெருக்கடிகளிலிருந்து கரையேறுவதற்குப் பக்கபலமாக அமைந்துள்ளது.

எத்தகைய அரசியல் ரீதியிலான, மற்றும் இராணுவ ரீதியிலான சிக்கல்களுக்கு முகம் கொடுக்க நேர்ந்தாலும், மஹிந்த ராஜபக்ஷவின் அதிகாரத் தரப்புக்கு, தமது நிர்வாகத்தை முன்னெடுத்துச் செல்வதற்கான சிரமம் என்ற முக்கிய சவாலெதுவும் கண்ணுக்கெட்டிய தூரத்தில் காணப்படவில்லை. மஹிந்த ராஜபக்ஷ அதிகாரத்தரப்புக்கு இன்னமும் ஓராண்டு வரையான காலத்துக்கோ அல்லது ஒருசில மாதங்களுக்கோ அத்தகைய சவால்கள் எதனையும் சந்திக்க நேரப்போவதில்லை.

எதிர்வரும் பெப்ரவரி 04ஆம் திகதிக்கு முன்னர் இலங்கை இனப்பிரச்சனைத் தீர்வு விடயத்தில் இலங்கைக்கு, இந்தியா அழுத்த

**தமிழில்: ராஜா**

மெதனையும் விடுக்கும் வாய்ப்பு அமையப் போவதில்லை. ஆகவே, இலங்கை அரசு, இன்னமும் சில காலத்துக்கு அனைத்துக் கட்சி மகாநாட்டுக் குழுவை தலையில் தூக்கி வைத்துக் கொண்டிருந்து விட்டு, 'தொப்' பென்று ஒரு நாள் அக் குழுவைத் தரையில் தூக்கி வீசி விட்டு கை கால்களை அலம்பிக் கொள்ளப் போகின்றது. அதற்கான முன்னேற்பாடுகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அரச சார்பற்ற நிறுவனமொன்றினூடாக அனைத்துக்கட்சிப் பிரதி நிதிகளை அயர்லாந்து, மற்றும் ஸ்பானியா (Spain) ஆகிய நாடுகளில் நடைமுறையிலுள்ள அதிகாரப்பகிர்வு விதங்கள் குறித்துக் கண்டு தெரிந்து கொள்வதற்காக அழைத்துச் செல்லும் விதத்தில் தற்போது ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 600 விக்கெட்டுக்களை வீழ்த்திய முதல் இந்தியரானார் கும்ளே!


கும்ளே

இந்திய கிரிக்கெட் அணியின் டெஸ்ட் அணித் தலைவர் அனில் கும்ளே தனது 600 ஆவது விக்கெட்டை வீழ்த்திச் சாதனை படைத்துள்ளார்.

இந்தியா மற்றும ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையேயான 3ஆவது டெஸ்ட் போட்டி ஆஸ்திரேலியாவின் பெர்த் நகரில் நடந்துவருகிறது. இரண்டாவது நாளாக நேற்று முன்தினம் போட்டி நடந்தது.

இதில், இந்திய கிரிக்கெட் அணியின் தலைவர் அனில் கும்ளே தனது 600ஆவது விககட்டை கைப்பற்றி சாதனை படைத்துள ளார்.

2ஆவது நாள் ஆட்டத்தில், இந்திய அணி தனது முதல் இன்னிங்சில் 330 ஓட்டங்களைக் குவித்துள்ளது. இதைய டுத்து ஆஸ்திரேலியா அணி களமிறங்கியது. அப்போது கும்ளே வீசிய பந்தை ஆண்ட்ரூ சைமண்ஸ் அடித்து ஆட முயன்றார். ஆனால் அந்த பந்து ராகுல் திராவிட்டின் கைகளில் அடைக்கலமானது.

இதன் மூலம் டெஸ்ட் போட்டிகளில் 600 விக்கெட்டுகளை வீழ்த்திய முதலாவது இந்திய வீரர் என்ற பெருமையை கும்ளே பெறறுள்ளார். அத்தோடு. உலகளவில் 3 ஆவது வீரர் என்ற சாதனையையும் படைததுள்ளார்.

கும்ளே தனது 400 ஆவது விக்கெட்டை பெங்களூரிலும், 500ஆவது விக்கெட்டை மொகாலியிலும் வீழ்த்தியுள்ளார். தற்போது 600ஆவது விக்கெட்டை பெர்த்தில் கைப் பற்றியுள்ளார்.

## கருணாநிதியுடன் முரளி

தமிழக முதலமைச்சர் கருணாநிதியுடன் கிரிக்கெட் பற்றிப் பேசியது தனக்கு மிகுந்த மகிழ்ச்சியளித்ததாக டெஸ்ட் போட்டிகளில் அதிக விக்கெட்டுகளை வீழ்த்தி சாதனை படைத்துள்ள இலங்கை வீரர் முததையா முரளிதரன் கூறியுள்ளார்.

சமீபத்தில் சென்னையில் முதலமைச்சர் கருணாநிதியை சந்தித்ததாகவும் கிரிகெட்டில் அதிக ஆர்வம் கொண்ட அவர் தன்னுடன் அது பற்றி விரிவாகப் பேசிய தாகவும் முரளிதரன் தெரிவித்துள்ளார்.

தொலைக்காட்சி ஒன்றுக்கு அவர் அளித்த பேட்டியில் இன்னும் 3ஆண்டுகள சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் விளையாடப் போவதாகவும் முரளிதரன் தெரிவித துள்ளார்.




கிரிக்கெட் விளையாடுவதை மிகவும் விரும்புவதாகக் கூறிய அவர் நாட்டு மக்கள், பெற்றோர், நண்பர்கள் மற்றும் மனைவி ஆகியோர் தனக்கு ஆதரவளித்து வருவ தாகவும் தெரிவித்தார்.

முரளிதரனின் சாதனையைப் போற்றும் வகையில் அஸ்கிரியவில் தபால்துறை, முத்திரை ஒன்றை வெளியிட்டிருந்ததும் தெரிந்ததே.

## பக்னர் கூறுகிறார்

மனிதர்கள் தவறு செய்வது இயற்கையென, சர்ச்சையில் சிக்கிய மேற்கிந்திய நடுவர் ஸ்ரீவ் பக்னர் தெரிவித்துள்ளார்.

இந்திய, ஆஸ்திரேலிய அணிகள் மோதிய இரண்டாவது டெஸ்ட் சிட்னியில் நடந்தது. இதில் பக்னர் ஆஸ்திரேலியாவுக்கு சாதகமாக பல தீர்ப்புகள் வழங்கவே அணி வெற்றி பெற்றது. இதைய டுத்து, தவறான தீர்ப்புகள் வழங்கிய பக்னரை தொடரிலிருந்து சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) நீக்கியது.

இந்நிலையில் பக்னர் அளித்த பேட்டியில்

"ஆஸ்திரேலிய தொடரின் எஞ்சிய போட்டிகளில் நடு வராகப்பணியாற்ற இயலாமல் போனது மிகுந்த வருத்தமளிக்கிறது. எனினும், ஐ.சி.சி.யின் முடிவை நான் மதிக்கிறேன். தவறு செய்பவன் மனிதன், அதை மன்னிப்பவன் தெய்வம். 35 போட்டிகளில் இம்முறை தவறாக ஆட்டமிழப்புக் கொடுத்ததற்காக நடுவரிலிருந்து நீக்கப்பட்டதை மிகவும் மோசமாகக் கருதுகிறேன்", என்றார்.

# மனிதர்கள் தவறு செய்வது இயற்கை என்கிறார் நடுவர் ஸ்ரீவ் பக்னர்

## அக்தரின் சாதனையை ஷோன் ரைற் முறியடிப்பார்?

170 கிலோ மீற்றர் வேகத்தில் வீசி அக்தரின் சாதனையை ஷோன் ரைற் முறியடிப்பாரென டெனிஸ் லில்லி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

உலகின் அதிவேகப்பந்து வீச்சாளர் சொயிப் அக்தர் "ராவல்பிண்டி எக்ஸ்பிரஸ்" என்று அழைக்கப்படும் அவர் மணிக்கு 161.3 கிலோமீற்றர் வேகத்தில் பந்து வீசியதே

## டிலான்

சாதனையாகும்.அக்தருக்கு அடுத்தபடியாக 2ஆவது அதிவேகப்பந்து வீச்சாளர் ஷோன் ரைற் ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த இவர் கடந்த டிசம்பர் மாதம் நியூசிலாந்துக்கு எதிரான 20 ஓவர் போட்டியில் மணிக்கு 160 கிலோமீற்றர் வேகத்தில் பந்து வீசினார். அகதரை நெருங்கும் நிலையில் இருக்கும் அவரது சாதனையை முறியடிக்கலாம் என்று எதிர பார்க்கப்படுகிறது.

இந்தியாவுக்கு எதிராக பெர்த்தில் நடைபெறும் 3 ஆவது டெஸ்டில் இடம்பெற்றுள்ள ரைற் அக்தரின் சாதனையை முறியடிக்க விரும்புவதாகத் தெரிவித்தார்.

இந்த நிலையில் ரைற் 170 கிலோ மீற்றர் வேகத்தில் வீசுவார் என்று ஆஸ்திரேலிய முன்னாள் பிரபல வேகப்பந்து வீச்சாளர் டெனிஸ் ல்ல்லி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறும்போது, அக்தரின் சாதனையை ரைற் முறியடிப்பார். அவர் 170 கிலோமீற்றர் வரை பந்து வீசுவார் என்பதில் எனக்கு எந்த ஆச்சரியமும் இல்லை என்றார்.

## இலங்கை அணி அறிவிப்பு

இந்தியா, ஆஸ்திரேலியா, இலங்கை ஆகிய மூன்று நாடுகள் பங்கேற்கும் முக்கோண கிரிக்கெட் போட்டி பெப்ரவரி மாதம ஆஸ்திரேலியாவில் நடைபெறுகிறது. இதற்கான, 15 பேர் கொண்ட இலங்கை அணி நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது.

அணியில் 6 வேகப்பந்து வீச்சாளர்கள் இடம் பெற்றிருக்கிறார்கள். முரளிதரன் மட்டுமே சுழற்பந்து வீச்சாளராக அணியில் சேர்க்கப்பட்டுள்ளார். மலிங்க பண்டார அணியில் இடம்பெறவில்லை.

அணி விவரம் வருமாறு: மஹேல ஜெயவர்த்தன (அணித் தலைவர்), சங்கக்கார (விக்கெட் காப்பாளர்), ஜெயசூரிய, தரங்க, தில்ருவான் பெரேரா, திலகரட்ன டில்ஷான், சாமர சில்வா, கப்புகெதர, வெலகெதர, சமிந்தவாஸ், மலிங்க, குலசேகர, முரளிதரன், மஹ்ரூப், அமர சிங்க.


பக்னர்

இலங்கை அணி 24 ஆம் திகதி ஆஸ் திரேலியா புறப்படு கிறது. எதிரவரும் 30 ஆம் திகத! மற்றும் பெப்ரவரி 2 ஆம் திக திகளில் முறையே இரண்டு பயிற்சி ஆட்டங்களில் விளையாடுகிறது. 3 நாடுகள் போட்டியில தனது முதல ஆட்டத்தில் இலங்கை அணி இந்தியாவை பெப்ரவரி 5 ஆம் திகதி சந்திக்கிறது.

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| மண்ணில் | விண்ணில் |
| --- | --- |
| 31 . 05 . 1912 | 31 . 01 . 2007 |

### திருமதி சின்னத்துரை இரத்தினம்

திதி: திரயோதசி (20.01.2008)

*அழுத கண்ணீர் காயுமுன்னே அம்மா!*
*ஓராண்டு ஓடியதோ*
*உன் கோலத் திருமேனி என்றும்*
*எம் அழியாச் சித்திரமே.*

இல.08, ஸ்ரான்லிக் கல்லூரி ஒழுங்கை,
அரியாலை, யாழ்ப்பாணம்.

பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(70273)

---

## மரண அறிவித்தல்

### திருமதி கந்தையா கனகம்மா



தையிட்டியைப் பிறப்பிடமாகவும் சித்தன் கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தையா கனகம்மா 19.01.2008 அன்று காலையில் சிவபதம் அடைந்தார்.

அன்னார் முருகேசு கந்தையா (இளைப்பாறிய முகாமையாளர் - உடுவில் பல நோ.கூ.சங்கம்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சின்னத்துரை - சிவபாக்கியம் தம்பதியரின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி முருகேசு தம்பதியரின் அன்பு மருமகளும் திருமதி சு.அனுசுயாதேவியின் பாசமிகு தாயும் சீ.சுந்தரராஜாவின் அன்பு மாமியும் அபிராமி (இராமநாதன் நுண்கலைப்பீடம்), உமாசுகந்தன் (கிளை முகாமையாளர், யாழ்.மா.அ.கூ.சங்கம்), ஜெயராமி ஆகியோ ரின் அன்புப் பேர்த்தியும் திருமதி கைலாயபிள்ளை கணேசம்மா (கொழும்பு), சி.கண்மணி (கொழும்பு), திருமதி கந்தப்பர் மகேஸ்வரி (கொழும்பு), சி.கணேசபிள்ளை (கனடா), சி.சிவமயம் (கனடா), திருமதி புஸ்பநாதன் சரஸ்வதி (கனடா), திருமதி அமிர்தானந்தன் சத்தியதேவி (கொழும்பு), திருமதி ஆனந் ஜெயபத்மினி (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்ற கையிலாயபிள்ளையின் மைத்துனியும் காலஞ்சென்றவர்களான வ.ஈஸ்வரம்பிள்ளை (ஓய்வுபெற்ற அதிபர்), வ.சுப்பிரமணியம் ஆகியோரின் மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.01.2008) ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'ஏ ந க ஹாரா', சித்தன்கேணி.

தகவல்: மு.கந்தையா (கணவர்).

(70280)

---

## வீதிகள் சேதம்

சில்லாலை சாந்தைகிராமத்திலுள்ள முக்கிய இரு வீதிகள் நீண்டகாலமாக புனரமைப்பு செய்யப்படாது குன்றும் குழியுமாக மக்கள் போக்குவரத்துச் செய்யமுடியாத நிலையில் உள்ளன.

இவ் வீதிகளைத் திருத்தித் தருமாறு சாந்தை விநாயகர் சனசமூக நிலையம், சாந்தை விநாயகர் கிராம அபிவிருத்திச் சங்கம் ஆகியன வலி.தென்மேற்கு பிரதேச சபையிடம் கடித மூலம் கோரிக்கை விடுத்துள்ளன.

இதன் பிரதி வலி. தென்மேற்கு பிரதேச சபையின் பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகப் பொறுப்பதிகாரிக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

(202-135)

---


## வாடகைக்கு

**யாழ். சிவன் பண்ணை வீதியில் மூன்றுஅறை வீடும் வேறாகக் கடையும் வாடகைக்கு உண்டு.**

தொடர்பு:- M.S.கனேலிங்கம்
பழையபார்சங்க வீதி,இணுவில் மேற்கு . 0776470385.



## பக்க வடிவமைப்பாளர்
(பகுதிநேரம்)

*பக்க வடிவமைப்பு மற்றும் கிராபிக் டிசைனிங் ஆகியவற்றில் அனுபவம் உள்ளவர்கள் பகுதி நேரமாகப் பணி யாற்றத் தேவை. கொழும்பில் அல்லது யாழ்ப்பாணத்தில் பணியாற்ற வசதி உண்டு.*

*அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு சம்பளம் பேசித் தீர்மானிக் கப்படும். அச்சகங்களில் பணிபுரிந்த வர்களுக்கு முன்னுரிமை தரப்படும்.*

*முழுமையான சுய விவரங்களுடன் விண்ணப்பிக்கவும்.*

mmslanka@gmail.com


---

## மரண அறிவித்தல்

### சண்முகம் (பத்தர்) சீதாலட்சுமி



அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் பூநாறிலேன், கொக்குவில் மேற்கை வதிவிடமாகவும் கொண்ட சண்முகம் சீதாலட்சுமி (18.01.2008) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அமரர் சண்முகத்தின் அன்பு மனைவியும் செல்லப்பா - அன்னமுத்து தம்பதியரின் மகளும் காலஞ்சென்றவர்களான கந்தசாமி (பரணி), இரத்தினம் (செட்டியார்), நடராசா, துரைஐயா, செல்லத்துரை ஆகியோரின் சகோதரியும் நாகபூஷணி, பாக்கியலட்சுமி, வசந்தகுமாரி, கமலாதேவி, சூரியகுமார் (ஜேர்மனி), தேவிகா ஆகியோரின் அன்புத் தாயும் கதிரவேலு (அமரர்), சொர்ணலிங்கம், பராஜசிங்கம், சதாசிவம் (அமரர்), செல்வநாயகி (ஜேர்மனி), மகேஸ்வரன் (பத்தர்) ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.01.2008) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பூநாறிலேன்,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.


தகவல்:
பிள்ளைகள்,
இ.மகேஸ்வரன் (மருமகன்).

(70274)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...ந்துறைப் படிப்பகம் ...சபை, யாழ்ப்பாணம்.

# சைவசமய மேம்பாட்டுக்குத் தன்னை அர்ப்பணித்தவர் சித்தாந்த சரபம்



சித்தாந்த சரபம் - சைவப்புலவர் வித்துவான் க.கணபதிப்பிள்ளை சைவ நெறிகாத்த சைவப்புலவர் பாரம்பரியத்தின் அரணாக நின்று அணி செய்தவர் அமரர் வித்துவான் க.கணபதிப்பிள்ளை என்றால் மிகையாகாது. சொல்லாலும் செயலாலும் தன்வாழ்வை சைவசமயத்தின் மேன்மைக் காக அர்ப்பணித்த புண்ணிய ஆத்மா. இறை பணிக்காகவும் இனிய கல்விப்பணிக் காகவும் இறையருளால் 19.12.1927இல் சுழிபுரம் கிராமத்தில் இப்பெருந்தகை பிறந்தார்.

சுழிபுரம் ஐக்கியசங்க சைவவித்தியா சாலையில் ஆரம்பக்கல்வியைக் கற்றுப் பின் யாழ்.சன்மார்க்கப் பாடசாலையிலும் திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியா சாலையிலும் கல்வியைத் தொடர்ந்தவர். ஆசிரியப்பணியில் இணைந்து திருநெல் வேலி சைவாசிரிய கலாசாலையில் பேரறி ஞர்களிடம் கற்கும் பேறுபெற்றார். பேரா தனைப்பல்கலைக் கழகத்தில் கலை மானிப் பட்டம் பெற்றதோடு வித்துவான் பட்டமும் பெற்றார். சைவப்புலவர் பரீட் சையிலும் சித்திபெற்று சிறந்த ஆசிரிய ராகப் பணியாற்றினார். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நிறைந்த ஆசிரியப் பணியாற்றிய இப்பெருந்தகை உருவாக் கிய மாணவச் செல்வங்கள் இவரை என் றும் மறக்கமாட்டார்கள். சிவந்தமேனி, உயர்ந்ததோற்றம், திருநீற்றுப் பொலி வோடு கம்பீரமாக வலம் வருவார். இந்துக் கல்லூரி பிரார்த்தனை மண்டபத்தில் இவர் ஆற்றிய சொற்பொழிவுகள் மாணவர் மனதில் தமிழ் ஆர்வத்தைத் துலங்க வைத்தது. எந்த ஐயத்தையும் தெளிவு படுத்தும் பேரறிவுமிக்க பேராசான். குறிப் பாக யாழ்.இந்துக் கல்லூரி வளாகத்தில் ஆண்டு தோறும் நடைபெறும் சேக்கிழார் விழாவுக்கு வருகைதரும் தமிழக அறிஞர் கள் இவரது ஆற்றலைக் கண்டு வியந்துள் ளனர். நாவலர் பெருமான் மரபு என்ற தாரக மந்திரத்தை உச்சரித்த வண்ணம் ஈழத்துச் சைவ மரபு பேணுவதில் மிக அவதான மாகச் செயற்பட்டார்.

### சித்தாந்த சரபம்

சைவசமயத்திற்கு யார் இடையூறு செய்தாலும் அவர்களைக் கண்டிக்கத் தவறுவதில்லை. பலநூறு கட்டுரைகள் எழுதிய ஆசிரியபிரான் சைவசித்தாந்தம் தொடர்பாக விளக்குவதில் தனித்துவம் மிக்கப் புலமையாளராக விளங்கினார். நல்லை ஆதீனத்தில் இப்பெருந்தகையின் சித்தாந்தப் புலமையைக் கௌரவித்து ''சித் தாந்த சரபம்'' என்ற கௌரவப்பட்டம் வழங்கி இப்பெருமகனாரைக் கௌவித் தார்கள்.

30-05-1972 ஆம் நாள் மதுரை திரு ஞானசம்பந்தர் ஆதீனம் இப்பெருமகனா ரின் பேருரையைச் செவிமடுத்து ''சைவ சித்தாந்த கலாநிதி'' என்ற சிறப்புப் பட்டம் வழங்கியதுடன் ஆதீன சம்பிரதாய விதி முறைப்படி பெரும் கௌரவம் செய்தமை பெருமைக் குரியது.

### துறவறம் பூண்டார்

இல்லற வாழ்வில் இணைந்து நல்லறம் பேணிய நல்லாசிரியர் தன்குடும்பக் கட மைகள் நிறைவுகண்டு பின் துறவற வாழ் வில் இணைந்தார் ''ஞானப்பிரகாசசிவம்'' என்ற தீட்சா நாமம் பெற்று வவுனியாவில் இலங்கை மெய்கண்டார் ஆதீனம்'' என்ற நிலையத்தை தோற்றுவித்தார். முழுநேரப் பணியாளராக சைவத்தமிழ் மேன்மைக்காக உழைத்தார். 29.01.2007 அன்று இறை நிழலையடையும்வரை பெருந்தொண் டாற்றியவர். யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த காலத்தில் சைவபரிபாலன சபையின் முக்கிய உறுப்பினராக விளங்கி சபையின் செயற்பாட்டுக்குக் காத்திரமான பங்கு வகித்தவர் ''இந்து சாதனம்'' பத்திரிகை யில் பல்வேறு நாமங்களில் இவர் எழுதிய சைவ சித்தாந்த கட்டுரைகள் மற்றும் கண்டனங்கள் பெறுமதியானவை. பல ஆலயங்களுக்கான திரு ஊஞ்சல் பாடல் களையாத்த பெருமை இவரைச் சாரும். இவர் யாத்த பறாளை விநாயகர் ஊஞ்சல் மிகவும் பிரசித்தமானது. தமிழ் அறிஞர் சரித்திரநூலில் (1994 வெளிவந்தது) இவரது சிறப்பு விவரிக்கப்பட்டுள்ளது. இவ ரது ஆக்கங்கள் பல தென்னக ஆதீன மலர் களில் சிறப்பாக வெளிவந்துள்ளன. ஈழத் துச் சைவப் பாரம்பரிய மரபில் முத்திரை பதித்த பெருந்தகையை நினைவு கூர வேண்டியது எம் கடனாகும்.

ஆறு.திருமுருகன்.

## தக்கார் மாண்பு

# கன்னித் தமிழுக்கும் கத்தோலிக்கத் திருமறைக்கும் பெரும்பணியாற்றிய சுவாமி ஞானப்பிரகாசர்

**நல்லூர் சுவாமி ஞானபிரகாசரின் 61 ஆவது நினைவு தினம் இம்மாதம் 22 ஆம் திகதியாகும். அதையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது.**

துரை ஆரோக்கிய தாசன்
B.A., P.G.D.E.
முன்னாள் பிரதி அதிபர்,
பலாலி ஆசிரியர் கலாசாலை.

நல்லூர் சுவாமி ஞானப் பிரகாசர் எம்மைப் பிரிந்து அறுபது வருடங்களுக்கு மேல் ஆகின்றது. கன்னித் தமிழுக் கும் கத்தோலிக்க திருமறைக்கும் நல்லூர் சுவாமி ஞானப் பிரகாசர் ஆற்றியபெரும்பணியையிட்டு நாம் காலமெல் லாம் நன்றிப் பெருக்குடன் நினைவு கூரக் கட மைப்பட்டுள்ளோம்.

இவரின் ஒப்பியல் அகராதி இவர் ஓர் ஒப் பற்ற மாமேதை என்பதற்குச் சான்று பகரு கின்றது. அகராதியின் முன்னுரையில் அடி களால் எழுதப்பட்ட கூற்று அனைவரின் சிந் தனைக்கு உரியது.

''அன்பினால் தூண்டப்பட்டு இடையூறு கள், துன்பங்கள் நிறைந்த குருத்துவத் தொண்டுடன், கல்வி விருத்திக்காக அயராது உழைத்தேன்.'' என்று தன்னைப்பற்றி இவர் இரத்தினச் சுருக்கமாகக் கூறியுள்ளார்.

இவர் மானிப்பாய் பிள்ளையார் கோயில் முகாமையாளரான இராசசிங்கம் சாமிநாதப் பிள்ளை என்பவரின் மகனாக 30.08.1875 இல் பிறந்தார். இவரது அன்னையார் தங்கமுத்து அம்மையார். இளம் வயதிலே கணவனை இழந்தவர். பின்பு அச்சுவேலியைச் சேர்ந்த ஸ்ரீ கம்பிமுத்துவை மறுமணம் செய்தார். சிறிய தந்தையின் வழிகாட்டுதல் தங்கமுத்து அன்ன முத்தாகவும், மகன் வைத்திலிங்கம் ஞானப் பிரகாசனாகவும் கத்தோலிக்கத் திருமறை யைத் தழுவ வழிவகுத்தது.

''ஈன்றபொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனைச் சான்றோர் எனக் கேட்டதாய்'' என்ற வள்ளுவனின் வாக்குக்கு இலக்கணமாய் விளங் கினார் அன்னமுத்து அம்மையார். குழந்தையு டைய உடலைமட்டும் பெற்றெடுப்பவள் அல்ல தாய், அதனுடைய புகழுடம்பையும் உரு வாக்குபவள் அவளே.

சிறிய தந்தையின் ஞானஒளி ஞானப்பிர காசனை வழிநடத்தியது. அத்துடன் அன்ன முத்துவின் ஞானஅமுதும் பிள்ளையை அறப் பற்றிலும் அன்னைமொழியிலும், மறைப்பற் றிலும் பின்னிப் பிணைத்து வளர்த்தன.

### ஈழ நாட்டின் புதிய சின்னப்பர்

ஞானப்பிரகாசர் கருவிலே திருவுடைய வராக விளங்கினார். இவருக்குக் கல்வி ஊட் டிய யாழ்.புனித பத்திரிசியார் கல்வி அன் னையே இவரால் மகிமையும் பெருமையும் அடைந்தாள். இவர் பதினெட்டாவது வய திலே புகையிரதப்பகுதி எழுதுவினைஞர் பரீட்சையில் முதலாவதாகத்தேறி சிறிது காலம் அரசாங்கத்தில் சிறந்த பணிபுரிந்தார்.

ஞானப்பிரகாசருக்குக் கிறிஸ்துவின் ஒளி யின் வழியில் வந்த அருள்மிகு சாள்ஸ் கொலின் அடிகள் கூறிய ஒரே ஓர் அமுதமொழி இவர் ஈழமணித்திருநாட்டின் புதிய சின்னப்பராக (பவுலாக) திகழுவதற்குக் காரணமாயிற்று.

### சுண்டிக்குளி பங்கின் முதல் குருவானார்

''நீர் இறைவனுக்குப் பணிபுரிய விரும்பி னால் ஏன் உலகத்தை துறந்து குருமடத்தில் சேரக்கூடாது?'' என்பதுதான் அந்த வாக் கியம்.

புனித சின்னப்பரின் வரலாற்றைப் புரட்டிப் பார்த்தால் எப்படிக் கொடூரவாதியாகத் திகழ்ந்த சவுலை ''நீ துன்புறுத்தும் கிறிஸ்து'' என்ற இனியகுரல் பவுலாக (சின்னப்பராக) மாற்றி கத்தோலிக்க திருமறையில் புனித இராயப்பர் போன்று முக்கியமானவராக்கியதோ, அது போன்று ஈழவள நாட்டில் ஒரு புதிய சின்னப் பராக மாறும் உன்னத நிலைக்கு வந்த ஞானப் பிரகாசர் 01.12.1901 இல் இயேசுவின் கரு ணையால் குருவாக திருநிலைப்படுத்தப்பட் டார்.

யாழ்.சுண்டிக்குளிப் பங்கின் முதலாவது பங்குத்தந்தையாக இவர் புனித திருமுழுக்கு அருளப்பர் ஆலய குருமனையிலிருந்து திரு மறைப்பணியை ஆரம்பித்தார். இயேசுவின் பணி பன்மடங்கு வளர்ச்சியடைந்தது.


### மறைப்பணியும் தமிழ்ப்பணியும்

நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசருக்கு கன் னித் தமிழும் கத்தோலிக்க திருமறையும் இரு கண்களாகத் திகழந்தன. இவர் மாபெரும் மறைப் பணியாற்றினார். ஆனால் இவர் இறுதி மூச்சுவரையும் இன்பத் தமிழையும் துறக்க வில்லை. அன்னை மொழிமேல் அதீதப் பற்றுக் கொண்டு அருந்தொண்டு புரிந்தார்.

''இறைவன் என்னை நன்றாகப் படைத் தனன் தன்னை நன்றாகத் தமிழ் செய்யு மாறே'' என்ற திருமூலரின் திருவாக்குக்கு இலக் கணமாக இவர் விளங்கினார். தமிழுக்குச் செய்த தன் நிக[illegible] பிறப்பு ஒப்பியல் அகராதி இது காலத்தால் அழியாதது. தமிழே உலகத் தாய்மொழி என்று திக்கெட்டும் முரசு கொட்ட கடினமாக உழைத் தவர் மாமேதை நல்லூர் சுவாமி ஞானப்பிரகா சர். இவரின் நற்பணிகள் இவரின் சீடரான தும்பளை கலாநிதி தாவீது அடிகளால் தொடர்ந்து பேணப்பட்டன.

பல்கலைக்கழக படிக்கட்டில் ஏற வாய்ப் பும் வசதியும் குறைந்த சூழ்நிலையில் வாழ்ந் தாலும் இறைவன் அடிகளுக்குத் தந்த தனிப் பெரும் ஆற்றலை நன்கு பயன்படுத்தி அயராது கடினமாக உழைத்து பன்மொழிப் புலவராய் பல நூல்களைச் சமைத்து பாரெங்கும் மறைப் பணியும் தமிழ்ப்பணியும் புரிந்தார்.

சொற்பிறப்பியல் ஆய்வு, திராவிட மொழிக் குடும்பம், இந்தோ ஐரோப்பிய மொழிகள் யாவும் ஒரே மூலமொழியினின்றும் கிளைத் தெழுந்தன என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டு பல மொழியியல் ஆய்வுக் கட்டு ரைகளைத் தக்க ஆதாரத்துடன் வெளியிட்ட வல்லுநர். இவர் எழுதிய மொழியியல் ஆய் வுக் கட்டுரைகளும் சொற்பிறப்பியல் தமிழ் அகராதியும் உலக மொழியியல் அறிஞர்களான கால்டுவெல், பேராசிரியர் வறோ, பேராசிரி யர் எமனு, தேவநேயப் பாவாணர் ஆகியோ ரின் வரிசையில் சுவாமிகளையும் வைத்து மதிப்பிடத் தகுந்த பெருமை அளித்துள்ளன. இவருடைய காலச் சூழ்நிலையை வைத்து நோக்கும்பொழுது இவர் தேர்ந்தெடுத்த துறைகளான தமிழர் வரலாறு, யாழ்ப்பாண வரலாறும் தொல்பொருளியலும் மொழியியல் (Linguistics) வளர்ச்சிபெற்றிருக்காத காலம். ''துணிவே துணை'' என்று இவர் தமிழ் மொழிக் கும் மறைக்கும் பெருந்தொண்டு புரிந்த செம் மல்.



### பன்மொழிப் புலவர்

''கத்தோலிக்க குருவாகக் கடமையாற் றிய இவர், தமிழ் மொழியின் பெருமையை ஈழத்திலும் பாரதநாட்டிலும் பரப்பியது மட்டு மன்றி ஆங்கிலநாடு, ஜேர்மனி முதலிய மேல் நாடுகளிலும் பரப்பினார். இவர் தமிழ்மொழி ஆராய்ச்சியிலே காலத்தைக் கழித்தார். சமஸ் கிருதம், பாளி, சிங்களம் தெலுங்கு, கன்னடம், மலையாளம், இந்தி, போர்த்துக் கேயம், ஆங் கிலம், இலத்தீன், ஜேர்மன் முதலிய பலமொழி களைக் கற்று அவற்றோடு சுவை பயக்கும் செந்தமிழை ஒப்பிட்டு ஆராய்ந்தார். இவ்வாறு செய்த மொழியாராச்சியின் பயனாக அ, இ, உ, எ என்னும் நான்கு எழுத்துக்களை அடிப்படையாகக் கொண்டே தமிழிலுள்ள எல்லாச் சொற்களும் பிறந்தன என்பதை எடுத்து விளக்கினார். உலகில் உள்ள மொழி களுள் காலத்தால் முந்தியது என்பதை மேல் நாட்டுப் பத்திரிகைகள் வழியாக உலகுக்கு எடுத்துக்காட்டினார். தமிழ்ச் சொற்களின் தோற்றத்தை ஆராய்ந்து 'தமிழ்ச் சொற்பிறப்பு ஆராய்ச்சி' என்னும் அரிய நூலையும் எழுதினார். தமிழ் மொழியின் பெருமையை உலக அரங்கில் முழங்கச் செய்தவர் சுவாமி ஞானப்பிரகாசர் என்று கூறலாம்'' என்று இலங்கைப் பல் கலைக்கழகப் போராசிரியர் கலாநிதி ஆ.சதா சிவம் குறிப்பிடுவது பொருத்தமானதே.

22.05.1981 இல் அறிவுக் கடலாகிய அடி களின் பெருமையை உணர்ந்து இலங்கை அரசு நினைவு முத்திரை வெளியிட்டுக் கௌர வித்தது. 1947 - 01 - 22 இல் இவர் இறைபதம் அடைந்தார். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

### செல்வி தர்ஷினி இராமச்சந்திரன்



தோற்றம்: 08.01.1980

மறைவு: 23.01.2005

திதி: 20.01.2008 (ஞாயிறு) திரயோதசி

கலையாத நினைவுகளுடன்
உதிரும் கண்ணீர் பூக்களால் -
உன்னை
அர்ச்சித்து இன்றும் உன்
குடும்பத்தினர்
கலங்கித் துடிக்கின்றோம்
உன் வரவிற்காக.....

மின்சாரநிலைய வீதி,
சுன்னாகம். (70046)

**குடும்பத்தினர்.**

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 22 | 23 |
| 05 | 12 |
| 1949 | 2007 |

### திருமதி தங்கவடிவேல் கமலலோசனா
(ஊறணி, வல்வெட்டித்துறை)

கடந்த 23.12.2007 அன்று காலமான எங்கள் குடும்ப விளக்கின் இறுதிக்கிரியைகளில் எம்மோடு துயர்பகிர்ந்த அனைவருக்கும் எமது மனமுவந்த நன்றிகள். நாளை 21.01.2008 திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் நினைவில் வாடும்:
**தங்கவடிவேல்** (கணவர்),
பிள்ளைகள்: **சீதாதேவி, ஈஸ்வரன், தீபா** (ஆசிரியர்),
**தீபன்** (அமெரிக்கா), **குருபரன்**
(யாழ்.பல்கலைக்கழகம் 2 ஆம் வருடம் முகாமைத்துவம்),
**சிவகுருநாதன்.**
ஊறணி, வல்வெட்டித்துறை. (70235)

---

## வீணை விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள பாவிக்கக்கூடிய வீணை உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: **K.P. பாலகிருஷ்ணன்**
692, K.K.S.வீதி, நுநாறுமரத்தடி. T.P.: 222 2940 (70244)

## இறைச்சிக்கோழி விற்பனை

புறொயிலர், கல்பேட தினமும் சுத்தமாய்செய்து குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

**நல்லூர் பாம் சென்ரர்,**
19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (70194)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறொயிலர், கல்பேட் இறைச்சிக்கோழி மொத்தமாகவும் சில்லறையாகவும் - (சுத்தம் செய்து) குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம். கோழி மாஸ் வகைகளும் புறொயிலர் கோழிக்குஞ்சுகளும் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: **சிவகுமாரன் பாம்,**
கல்வியங்காட்டுச் சந்தி.

## ஒத்துமாறல்

திருகோணமலை கல்வி வலயப் பாடசாலை ஒன்றின் விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியர் யாழ். மாவட்டத்தில் பணிபுரியும் விஞ்ஞான ஆசிரியர் ஒருவருடன் ஒத்துமாற விரும்புகிறார்.

தொடர்பு: **பொ.இராசரத்தினம்,**
சுதுமலை தெற்கு, மானிப்பாய்.
0773604619, 0773169620

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்ப கனடா குடியுரிமையுடைய 1974 இல் பிறந்த, செவ்வாய் தோசமுள்ள, கிரகபாவம் 34 மணமகனுக்கு A/L இற்குக் குறையாத கல்வியுடன் அழகிய நிறமான மணமகள் தேவை. கலியாணத் தரகர்களும் தொடர்பு கொள்ளலாம்.

தொடர்பு:
**திருமதி ச.இரவீந்திரன்,**
'பிருந்தாவனம்', சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.
தொலைபேசி:
0602216986.
(சீ/531098)

---

### சாரதி அனுமதிப் பத்திரம்; எழுத்து, செயன்முறைப் பரீட்சைத் திகதிகளைப் பெறலாம்

சாரதி அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான எழுத்து மற்றும் செயல்முறைப் பரீட்சைகளுக்கான திகதிகள் நாளை மறுதினம் தொடக்கம் வழங்கப்படவுள்ளன என மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள உதவி ஆணையாளர் வரதநாதன் தெரிவித்தார்.

விண்ணப்பம் செய்த பரீட்சார்த்திகள் பரீட்சைத் திகதிகளை அலுவலக நாள்களில் நண்பகல் 12 மணிவரை யாழ்.செயலகத்திலுள்ள திணைக்களத்தின் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம் - புதிய மோட்டார் சைக்கிள்களுக்கான பதிவுகளையும் மேற்கொள்ள முடியும் என்றும்- அவர் தெரிவித்துள்ளார். (202)

---


நீங்கள் உங்கள் குழந்தைக்கு ஓர் ஆரோக்கியமான, மதிநுட்பத்துடன் கூடிய எதிர்காலமொன்றை பெற்றுக்கொடுக்கின்றீர்களா ?

Cow & Gate

Step-Up 3

AA, DHA மற்றும் FOS என்பன வயிற்றுப் பகுதி தொற்றுநோய்களை கட்டுப்படுத்துவதுடன் மூளை மற்றும் கண் விருத்திகளுக்கு ஒத்துழைப்பு வழங்குகின்றது.

AA மற்றும் DHA என்றால் என்ன ? மனித உடல் வளர்ச்சிக்குரிய பலகோடிக்கணக்கான நுண்ணியவான உடற்கலங்களின் உற்பத்தியில் கொழுப்பமிலங்கள் மற்றும் புரதங்கள் என்பன அத்தியவசிய பங்கை வகிக்கின்றன. AA மற்றும் DHA என்பன மனித மூளை, கண்களின் வளர்ச்சிக்கு உதவும் கலங்களின் உற்பத்தியை ஊக்குவிக்கும் முக்கிய கொழுப்பமிலங்களாகும். இவ் அத்தியாவசிய கொழுப்பமிலங்கள் தேவைக்கேற்றவாறு கிடைக்கப்பெறாதவிடத்து குழந்தையின் இவ்விரு முக்கிய அங்கங்களின் வளர்ச்சி பலவீனமடைவதற்கு வாய்ப்புகள் காணப்படுகின்றன. அதனால் இவ்வகையான ஆபத்துநிலைகளை தவிர்த்து குழந்தைகளின் ஆரோக்கியமான மதிநுட்பத்துடன் கூடிய வாழ்க்கையின் ஆரம்பத்தை பெற்றுக்கொடுக்கவேண்டியது பெற்றோர்களின் கடமையாகும்.

FOS என்றால் என்ன ? குழந்தையின் இளம் மென்மையான குடல்களில் பக்றீரியா மற்றும் வைரசுகளின் தொற்றால் தொற்று நோய்கள் ஏற்படுகின்றன. FOS (Fructo Oligo Saccharides) ஒரு பிரதான நார்ப்பொருள், குடற்பகுதிகளில் நன்மை பயக்கும் பக்றீரியாக்களின் உற்பத்தியை ஊக்குவித்து அவற்றின் மூலம் நோய்களை விளைவிக்கும் பக்றீரியாக்களினதும் வைரசுகளினதும் வளர்ச்சியை கட்டுப்படுத்துகின்றது. இதன் இறுதியான பிரதிபலனாக வயிற்றுப்பகுதி தொற்றுகள் கட்டுப்படுத்தப்படுகின்றன.

1-3 வயது வரையான சிறுவர்களுக்கான போசணைப் பானம்




மேலதிக தகவல்களுக்கான தொடர்பு 0773-136727, 0773-290191.
விநியோகஸ்தர்கள் டார்லி பட்லர் அண்ட் கம்பனி லிமிடெட்


---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 21 | 21 |
| 07 | 12 |
| 1940 | 2007 |



### அமரர் தம்பிப்பிள்ளை செல்வரத்தினம்

மண்ணுலகில் மன்மதனாக வலம் வந்தீர்
விண்ணுலகம் சென்று இன்றுடன் மாதம் ஒன்று!
முழு நிலவை முகில் விழுங்கி- இன்றுடன்
முப்பத்தொரு தினங்கள் ஓடினவோ?
நினைவினிலே நிஜமாகி
நிஜத்திலே நிழலாகி- நித்தமும்
உங்கள் முகஅழகைத் தேடுகின்றோம்
உண்மையில் முகவரியை நாமறியோம்
சத்தியத்தாய் பெற்றெடுத்த
சத்தியத்தின் நாயகனே!
நித்தம் நித்தம் மாறுகின்ற
நிழலுலகம் வாராயோ?
ஓடி மறைந்தது ஓராயிரமாண்டானாலும்!
ஒரு நாளில் ஒரு நிமிடமேனும் நினைத்திருப்போம்!
வானும் கடற்பரப்பும் வையகமும் உள்ளவரை
வாழ்வாய் நீயெங்கள் இதயக்கோயிலில்.

அன்னாரின் இறுதிக்கிரியையில் கலந்து கொண்டவர்களுக்கும் உள்நாட்டில் வெளிநாட்டில் இருந்து அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும் மேலும் பல வழிகளில் உதவி புரிந்து ஆறுதல் நல்கிய அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் அந்தியேட்டிக் கிரியை இன்று (20.01.2008) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் இந்நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் பங்கு கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!!சாந்தி!!!

தகவல்:
**த.ஜயரத்துரை** (காந்தி)
**குடும்பத்தினர்.**
அல்வின் வீதி, காரைநகர். (70239)

---

### யோகாசன வகுப்புகள்

யாழ்ப்பாணம், ஜன.20

கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண சமிதியினர் நடத்தும் யோகாசன தியான வகுப்புகள் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்கு சமிதி மண்டபத்தில் ஆரம்பமாகவுள்ளது. (202)

### கூட்டம்

யாழ்ப்பாணம், ஜன.20

ஆங்கில டிப்ளோமா ஆசிரியர் சங்கத்தின் கூட்டம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10மணிக்கு யாழ்.சன்மார்க்க மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. (202)

### கலைக்கூறு பயிற்சி

யாழ்ப்பாணம், ஜன.20

வடமாகாண சாரண சங்கம் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் நடத்தும் மாகாண மட்டத்திலான கலைக் கூறு 1 பயிற்சி நேற்றும் இன்றும் யாழ். மத்திய கல்லூரியில் ... (202)

---

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
### குமாரசாமி சண்முகலிங்கம்
(ஓய்வுபெற்ற சிரேஷ்ட புகையிரத நிலைய அதிபர்)

| அன்னையின் மடியில் | ஆண்டவனின் அடியில் |
|---|---|
| 04.06.1931 | 11.02.2006 |

திதி: 20.01.2008 (திரயோதசி)

*''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்*
*வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்''*

பிறந்தவன் எவனுக்கும் மரணமும்
மரணப்பட்டவனுக்குப் பிறப்பும் நிச்சயமே!
தவிர்க்கமுடியாத உன் கடமைகளைச்
செயலாற்றுவதில் இதற்காகக் கவலைப்படாதே!
**எங்களின் இதயத் தெய்வமே!**
**தங்களின் உயர்ந்த எண்ணங்களை**
**எங்களின் இலட்சியமாகக் கொண்டு**
**தங்களின் புனிதமான பாதையிலே**
**நாங்கள் உறுதியாகச் செல்லுவோம்.**

''மங்கை இல்லம்'',
சந்தை வீதி,
உடுப்பிட்டி. (70253)

**மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போலிக் கௌரவம்

குறமகள்

பெண் எழுத்தாளர்கள் அருகிக் காணப்பட்ட ஈழத்துச் சிறுகதைத் துறை வரலாற்றின் ஆரம்பகால கட்டத்தில் பிரகாசித்த பெண் எழுத்தாளர்களில் 'குறமகள்' என்ற புனை பெயரில் எழுதிவந்த இராமலிங்கம் வள்ளிநாயகியும் ஒருவராவார். இவர் தொழிலால் ஓர் ஆசிரியை.

ஈழகேசரியில் எழுத ஆரம்பித்த இவரது சிறுகதைகள் ஈழத்தின் பல பத்திரிகைகளிலும் பிரசுரமாகியுள்ளன. ஐந்து எழுத்தாளர்கள் இணைந்து 'ஈழநாடு' வாரமலரில் எழுதிய 'மத்தாப்பு' குறுநாவலின் ஓரங்கம் இவரது கைவண்ணத்தில் வெளிவந்தது. நல்ல மேடைப் பேச்சாளராகவும் மிளிர்ந்த இவரது புனைகதைத் திறன் வெளிப்படுத்தும் அவரது சிறுகதைகளில் இதுவும் ஒன்றாகும்.

பூம்! பூம்! பூம்!...

"இந்தப் பண்டார எஞ்சின் வந்தாலும் வந்தது. மனிதரை நித்திரை கொள்ள விடுகிறதா. இந்த விடியற்காலையில்?" என்று முணுமுணுத்தவாறே குடிசையினின்றும் வெளியே வந்தான் வைரவன். தோட்டத்தில் நின்ற என்னைக் கண்டதும் "என்ன தங்கச்சி! நான் சொல்வது பிழையா?" என்றான்.

"இல்லை! இல்லை! அதிருக்கட்டும், டேசனுக்குப் போக வேண்டாமா?" என்று கேட்டேன்.

"இதோ பறக்கிற கப்பல் வேகத்திற் போகிறேனே" என்றவாறு சென்றான்.

எனக்கு வைரவனைக் கண்டால் ஒரே சிரிப்பு. அவன் அகராதியே தனி. எங்கள் ஊருக்கு 'டீசல்' எஞ்ஜின் வரத் தொடங்கிய காலத்தில் தன் குடிசைக்கு முன் வந்து நின்று வேடிக்கைபார்ப்பான். சில நாள்களில் அவனுக்குச் சலிப்பு ஏற்படவே அதற்குப் 'பண்டார என்சின்' எனப் பெயரும் வைத்துவிட்டான். நான் காரணம் கேட்டபோது, என்ன தங்கச்சி எம்.ஏ. படித்துவிட்டு எ.பி.சீ.டீ.யில் பெயில் விடுபவர்களைப் போலிருக்கிறீர் எனக் கூறி காரணத்தையும் சொன்னான். மார்கழிமாத விடியற்காலையில் பக்தர்கள் சங்கூதித் துயிலெழுப்புவது போல இதுவும் செய்கிறதாம். இதைக் கேட்டால் யார் தான் சிரிக்கமாட்டார்.

அன்று வரும் விசேட வண்டியில் என்தோழி தர்மா வருவதாகக் கடிதம் போட்டிருந்தாள். இணைபிரியா நண்பிகளாய்ப் பலவருடம் ஹொஸ்டல் வாழ்க்கை நடத்திய நாம், சித்திய டைங்கோமென்ற அரசினரின் ஒரு சொல்லால் பிரிக்கப்பட்டோம். இப்போது அவள் ஓர் ஆசிரியை. நான் ஓர் ஆசிரிய மாணவி. எமது கடிதப் போக்குவரவும் சிறிது சிறிதாகக் குறைந்து அற்றே போய் விட்டது.

வாழ்க்கை எவ்வளவு விசித்திரமானது! எத்தனையோ பேரைச் சந்திக்கிறோம் அறிகிறோம், பழகுகிறோம், நேசிக்கிறோம், அப்புறம் பிரிகிறோம். பிரியும்போது கவல்கிறோம், நம்மைப் பிரிப்பது 'விதி' என்று ஒரு கண்காணாத பொருள் மீது வசைமாரி பொழிகிறோம். நாளா வட்டத்தில் எல்லாம் மறந்து விடுகிறது. ஆம்! மறதி!! ஆண்டவன் சீவராசிகளுக்கு அளித்த அருங்கொடையாம். அது இல்லாவிட்டால் இன்று நாம் ஒவ்வொருவரும் பைத்தியங்களாக உலாவுவோமாம் இத் தாரணியிது. நல்ல வேடிக்கை! ஆனால் மறுக்க முடியாத உண்மை.

இரண்டு வருடங்களின் பின் நேற்று தர்மாவிடம் இருந்து ஒரு கடிதம் வந்து என்னை ஆச்சரியக்கடலுள் ஆழ்த்தி விட்டது. பக்கம் பக்கமாக எழுத்துக்களுடன் தர்மா எனக்கெழுதிய கடிதம் இதோ.

"இராசாத்தி!"

அலைந்த மனதிற்கு ஆறுதல் தேட வருகிறேன் உம்மிடம். நாளை எக்ஸ்பிறெசுக்கு ஆளனுப்பி வைக்கவும். இச்சித்திரை விடுதலை என் சித்தத்தைத் தெளியவைக்குமென நம்புகிறேன்.

'தர்மா'

என் இப்படிவிரக்தி தோன்ற எழுதியுள்ளாள். தந்தை தாயரின் அருந்தவப் பெண்; ஆசைக்கொரு அண்ணா. செல்வத்துள் நீந்துபவள். குணக்குன்று, முற்போக்குவாதியவள். ஆனால் தீவிரவாதியல்ல. நாமெல்லாம் உலகத்தைச் சீர்திருத்தும் பேர்வழிகள் போல வாதாடும்போது ஒரே கேள்வி போட்டு எம்சிந்தனையைக் கிளறிவிடுவாள். "மனிதன் சூழலை ஆளுகிறானா? சூழல் மனிதனை ஆளுகிறதா?" சிக்கலான பிரச்சனை என்? அவள் சொல்வதும் சரிதான். பள்ளி வாழ்க்கையில் சமுதாய முன்னேற்றத்தைப் பற்றி வீரப் பிரதாபம் பேசி, குன்றிலிட்ட தீபம் போல் பிரகாசிப்போமென்ற பல சோதரிகள், இன்று பரந்த உலக வாழ்க்கையிற் புகுந்ததும் தம் கொள்கைகளையெல்லாம் காற்றிற் பறக்கவிட்டு, குடத்தினுள் தீபம் போல் இருக்கிறார்கள். அதுதான் சூழலின் வன்மை.

தர்மா, ஆழ்ந்து சிந்திக்கும் ஆற்றலுடையவள். எவ்வித உணர்ச்சியையும் கட்டுப்படுத்தும் அடங்கிய சுபாவம் உள்ளவள். ஆனால் இக்கடிதம்.. என் தர்மா...?

இதோ! வைரவன் பெட்டியுடன் பின் தொடர, என் தங்கை ரதியின் கையைக் கோர்த்தவாறே வந்து கொண்டிருந்தாள் தர்மா. நானும் அம்மாவும் வாசலுக்கு விரைந்தோம். "பட்டணத்துத் தங்கச்சியைப் பாருமன். எப்படிச் சுருண்டுவிட்டது?" என்றான் வைரவன். அடடா, கம்பனின் காவிய தர்மாவா இவள்? அழகு பொழிந்த முகமானது வாடிச் சோபையிழந்திருந்தது. கண்களைச் சுற்றிக் கருவட்டம். சுருங்கச்சொன்னால் மிகக் கேவலமான நிலையிலிருந்தாள்.

"இதென்ன கோலம்!" என்றாள் அம்மா.

"சுகயீனமாக இருந்தேன்" என்றாள் வழமையான புன்முறுவலுடன். வந்த ஆரவாரம் இரண்டு நாள்களில் அடங்கியது.

அன்று நாமிருவரும் வீட்டிற்குள் இருந்து கடந்த நாள்களை ஒவ்வொன்றாக நினைவூட்டி மகிழ்ந்து கொண்டிருந்தோம். கல்லூரியில் நாங்கள் நடத்திய திருவிளையாடல்களையும் அதற்குக் கிடைத்த தண்டனைகளையும் எடுத்துச் சொல்லிச் சிரிக்க, அதை ரசித்துக் கொண்டிருந்தனர் அனைவரும்.

தபால்! ஓடிச்சென்று பெற்றுக்கொண்டேன். எனக்கு என் பயிற்சிக் கலாசாலைத் தோழி புஷ்பாவும், தர்மாவுக்கு அவளண்ணாவும் எழுதியிருந்தனர். புஷ்பா ஒரு தீவிர முற்போக்குவாதி. இப்போது எழுந்திருக்கும் புரட்சி வீரரைப் பின்பற்றுபவள். "மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்" என அடிக்கடி பாடுபவள். அவளுடைய அண்ணா சுகவீனமாக ஊரிலே வந்து நிற்பதாகவும் இருவரும் ஒருநாள் என்னிடம் வருவதாகவும் எழுதியிருந்தாள். இதைத் தர்மாவுக்குச் சொல்ல நிமிர்ந்து பார்த்தேன். அவளைக் காணவில்லை. தேடிச் சென்றேன். வீட்டின் பிற்புறமிருக்கும் மாமர நிழலிலே கரத்தில் கடிதத்தை வைத்தபடி உட்கார்ந்திருந்தாள். அவள் சோகமே எனக்குத் தெரியாத புதிராக இருந்தது.

"தர்மா!" நீர் தேங்கிய விழிகளுடன் நிமிர்ந்து பார்த்தாள்.

"என்ன சேதி?" மௌனம். "என்னிடமும் மறைக்கிறீரா?"

"உம்மிடம் சொல்லத்தானே வந்துள்ளேன், இராசாத்தி!"

"அப்படியாயின் சொல்வதுதானே" நீண்ட நேர மௌனம். தொடர்ந்து ஒரு பெருமூச்சு. அதைத்தொடர்ந்து,

"இராசாத்தி, நான் ஆசிரியையாகக் கடமையாற்றினேன் சிறிதுகாலம். அது உமக்குத் தெரியும். "கள்வர்களும் கயவர்களும்" நிறைந்த இவ்வுலகில் பெண்கள் முன்னேற வழியில்லைத்தான். எனினும் என் திடசித்தம் என்னை நேர்மையுடன் கடமையாற்ற வைத்தது. இந்நிலையில் என் எதிர்காலச் சிக்கல் எழுந்தது. அப்பாவோ தன் பணப் பெருமை, குலப்பெருமை, பதவிப்பெருமை இவ்வளவையும் காத்துக்கொள்ளத் தன் மாபெரும் செல்வத்தைச் சீதனமாகப் பணயம் வைத்து அலைந்து திரிந்தார். அண்ணாவும் நானும் சீதன வழக்கத்தை விட்டுவிடுமாறு வாதாடினோம். அவர் கேட்டால்தானே. உலகில் பணக்காரப் பெற்றோர் இருக்கும் வரையும் ஏழைப் பெண்களுக்குக் கதிமோட்சமேது? கரும்பு தின்னக் கொடுத்து கூலியும் கொடுத்தது போல, பெண்ணையும் கொடுத்து பொன்னையும் கொடுத்துப் பெருமையை நிலைநாட்ட எம்தாய் தந்தையர் இருக்கும்போது; வரதட்சணை வாங்குகிறார்களே வாலிபர்கள்; என நாம் எப்படி அவர்களைக் குற்றஞ் சாட்டலாம்... ஆம், அப்பா உயரப் பறக்க ஆசைப்பட்டார். ஆனால் இப்போது...

கடைசியாக ஒரு பெரியவர் தன் மைத்துனனுக்கு விவாகம் ஒழுங்குபண்ண வந்தார். மாப்பிள்ளை பெரும்பதவியிலிருப்பவராம். சீதனம் எழுதப்பட்டது. விவாகப் பதிவும் நடந்தேறியது. சுந்தரம்... அதுதான் என் சுந்தரின் பெயர். சட்டத்தின் முன் சதிபதிகளானோமாகையால் எம் காதல் வளர்ச்சிக்குச் சமூகம் இடம் கொடுத்தது. இன்ப நினைவுகள், தேனூறும் மொழிகள், எதிர்காலத் திட்டங்கள். இப்படியே மூன்று மாதம் ஆகாய வீதியில் உலாவி வந்தோம்....

விவாக நாள் குறிப்பதற்காக வெளியே சென்றிருந்த அப்பா கடுங்கோபத்துடன் வீட்டுக்கு வந்து அண்ணாவை அழைத்தார். ஏதேதோ சொன்னார். இருவரும் வாக்குவாதம் செய்தனர். அப்போது நானும் சுந்தரும் உள்ளே பேசிக்கொண்டிருந்தோம். 'தங்கச்சி' என்ற அப்பாவின் இடிமுழக்கக் குரலைக் கேட்டு வெளியே வந்தோம்.

"இதென்ன பழக்கம்? எதற்கும் ஓர் அளவு வேண்டும்" என்றார் கடுமையாக. நான் திடுக்கிட்டேன். சுந்தர் அவமானத்தால் குன்றிப்போனார். அண்ணா குனிந்த தலை நிமிரவேயில்லை. ஆத்திரத்தால் துடித்த இதழுடன் சென்றுவிட்டார் சுந்தர். எவ்வளவு நாள்கள் நாம் இப்படித் தனிமையில் பேசியிருக்கிறோம். அப்பாவுக்கும் தெரியுமே. அவருக்கு என் நேர்மையில் அசாத்திய நம்பிக்கை. அப்படியானால் என் இப்படி?... துக்கத்தால் குமுறினேன். "தங்கச்சி!" என்றார் அப்பா. ஆகா! என்ன பரிவு, என்ன கனிவு!

"நீ அவனை மறந்துவிடு".

என் மனதில் திரைப்படம்போல் ஓடிக்கொண்டிருந்த அவளது நிகழ்ச்சிகளில் இந்த இடம் என்னைத் திடுக்கிட வைத்தது. மனக்கலக்கத்தை வெளியில் காட்டாதவாறு அவளைப் பார்த்தேன். சொல்வதையும் மறந்து வானவெளியை ஊடறுத்ததுபோல வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள். மிதமிஞ்சிய துக்கத்தினால் போலும் ஒரு சொட்டுக் கண்ணீராவது வரவில்லை. அவள் முகமே வரண்டு இருண்டுவந்தது. அச்சோக சித்திரம் என் மனதைக் கலக்கி என் கண்களிலும் நீரை வருவித்தது.

ஆலைச் சங்கு அலறியது. ஆகாய விமானம் இரைந்தது. நடுப்பகல் 12 மணி. "நிம்மதியாயிருந்த ஊருக்கு யாரோ கண்ணூறு போட்டுவிட்டான்கள்" என்றவாறே தன் குடிசைக்குள் நுழைந்தான் வைரவன். சிலைபோல் இருந்த அவள் கரங்களைப் பற்றிச் சுய நினைவுக்குத் திருப்பினேன்.

..இராசாத்தி! இது எனக்கு ஒரு பெரும் அதிர்ச்சி. அப்பாவாக ஒரு நாள் சுந்தரைப் பிடித்து வந்தார் - இவர்தான் உன் கணவரென்றார்- சட்டத்தின்முன் சதிபதிகளாக்கினார் - அன்பு வளர ஆதரவளித்தார் - பின் 'மறந்து விடு' என்கிறார். நினைத்தபோது நேசிப்பதற்கும் நினைத்தபோது நீக்குவதற்கும் என் இதயத்தை ஒரு சிலைக்கு ஒப்பிட்டார் போலும், அப்பா.

"அப்பா!" என அலறி விழ்ந்தேன். சுந்தர் தன் அந்தஸ்துக்கும் பெருமைக்குமேற்ற வேலையிலில்லையாம். அந்தப் பெரிய மனிதர் தன்னை ஏமாற்றிவிட்டாராம். அவன் பணமில்லாதவனாம்.

அதையறிந்தவுடன் அப்பெரிய மனிதர்மீது பழி வாங்கும் நோக்கமாக விவாகத்தை நிறுத்த யோசித்தார். நான் கெஞ்சினேன், அழுதேன், அடம் பிடித்தேன்; பயனில்லை. அண்ணாவோ மெல்லவும் முடியாது விழுங்கவும் முடியாது திணறினான்.

மறுநாள் அப்பெரிய மனிதர் அழைக்கப்பட்டார். அப்பா முழங்கு முழங்கென்று முழங்கினார். அவரும் தன் கௌரவத்தைக் காப்பாற்ற வேண்டுமே. இடி இடியென்று இடித்தார். இம் முழக்கத்திற்கும் இடிக்கும் எங்காவது மழை பொழிந்துதானே ஆகவேண்டும். ஆம்! என் கண்களிலிருந்து மழை மழையாகப் பொழிந்தது. இருவரில் ஒருவராவது விட்டுக் கொடுக்கவில்லை. பெரிய மனிதர்களல்லவா? எப்படி விட்டுக் கொடுப்பார்கள்? கௌரவம்.. அது போய்விடுமே. அதைக் காப்பாற்ற எம் இன்ப வாழ்க்கைக்கு ஈமக்கடன் செய்தனர்.

அண்ணாவுக்கோ மனப் போராட்டம். எனக்கோ உயிர்ப் போராட்டம். சுந்தருக்கோ...

விவாகமொன்றில் யார் முக்கிய பங்கு எடுத்தார்களோ அவர்களின் அனுமதியின்றியே விவாகப் பேச்சும் முற்றுப் பெற்றது. அப்படியே விவாகரத்திற்கும் நாள் குறிக்கப்பட்டாயிற்று.

இதையறிந்ததும் பதைபதைத்து ஓடிவந்தார் சுந்தர். இருவரும் என்ன செய்வது., என்ன பேசுவது? என்று தெரியாது திணறினோம். கடைசியாக அவர் தயங்கிக்கொண்டே "தர்மா! அப்படியானால் வா, நாம் கண்காணாத இடத்திற்குச் சென்று விடுவோம்" என்றார்.

ஆனால் நான் இருவருடைய நிலையையும் பூரணமாக அறிந்திருந்தேன். அதாவது பெற்றாரை, உற்றாரை, உறவினரை, அவர்கள் கௌரவத்தை மீறி ஒன்றும் செய்யமுடியாத பேடிகள், கோழைகள் நாம். இருபது வருடத்திய பாசம் மூன்று மாதக் காதலின் திண்மையை மெலிய வைத்துவிட்டது. மனமும் மனமும் ஒன்றியபின் பணம் அவசியமில்லை என்ற முடிவுக்கு வந்தேன்.

(08 பக்கம் பார்க்க....)

# இன்றைய மாணவர் மத்தியில் மொழி அறிவு தாழ்ந்து நிற்பதற்கு ஆசிரியர்களே காரணர்

## 88 வயதிலும் இலக்கண நூல் எழுதும் தமிழ் அறிஞர் வெளியிடும் கருத்து

மரபு வழிப் புலமையும் ஆழமான இலக்கண அறிவும் மிக்க பண்டித பரம்பரையின் இறுதித் தூண்களில் ஒருவராக வாழ்ந்துகொண்டிருப்பவர் அளவெட்டியைச் சேர்ந்த பண்டிதர் க.நாகலிங்கம் அவர்கள். தமது 88ஆவது வயதிலும் தொடர்ந்து எழுதிக்கொண்டிருக்கும் பண்டிதர் இதுவரை மூன்று பாகங்களாக அமைந்த செந்தமிழ் இலக்கண விளக்க நூல்களை வெளியிட்டுள்ளார். எழுத்தும் சொல்லும், செய்யுளியலும் அணியியலும், அகத்திணையியலும் புறத்திணையியலும் என்பவையே அவையாகும். செந்தமிழ் இலக்கண விளக்கம் நான்காம் பாகமாக மெய்பாட்டியலும் மரபியலும் விரைவில் வெளிவர உள்ளது.



பண்டிதர் க.நாகலிங்கம்

இன்றைய மாணவர் மத்தியில் தமிழ் அறிவு தாழ்வுற்றமைக்கு கற்பிக்கும் ஆசிரியர்களே காரணம் என்கிறார் பண்டிதர். அவருடனான செவ்வி இங்கு தரப்படுகின்றது.

வினா:- உங்களது ஆரம்பக்கல்வி பற்றியும் அவ்வேளை உங்களுக்குத் தமிழார்வத்தை ஏற்படுத்தி யவர்கள் பற்றியும் சிறிது கூறுங்கள்.

விடை:- எனது ஆரம்பக் கல்வி அளவெட்டியிலுள்ள சீனன் கலட்டி ஞானோதய வித்தியாலயத்தி லேயே ஆரம்பித்தது. பின்னர் அளவெட்டி ஆங்கிலப் பாடசாலையிலே (தற்போதைய அருணோதயக் கல்லூரி) கல்வியைத் தொடர்ந்தேன். எனக்குச் சிறுவயதிலே தமிழார்வத்தை ஊட்டியவர்கள் குருகவி ம.வே.மகாலிங்கசிவமும் மாவைக் கௌணியன் வெண்ணைக் கண்ணனார் நவநீத கிருஷ்ணபாரதியாருமே ஆவர். எனது பாடசாலைக் கல்வி நிறைவு பெற்றபின் எனது உறவினர் கோப்பாய் ஆசிரிய கலாசாலை யிற் சேர்க்கும்படி கேட்பதற்காக மகாலிங்க சிவத்திடம் அழைத்துச் சென்றார். அப்போது அவர், "தண்ணீருக்குள் விழுந்தவன் உதவி தேவை என்றால் கையை மேலே உயர்த்தவேண்டும். அதுபோல ஆசி ரிய கலாசாலையிற் சேர்வதாயின் இன்னும் படிக்கவேண்டும்" என்று கூறி நவநீத கிருஷ்ண பாரதியாரிடம் அறிமுகம் செய்து வைத்தார். நான் பாரதியாரிடம் மூன்று வருடங்கள் குருகுலக் கல்வி முறையில் விட்டுக் குச் சென்று தமிழ் கற்றேன். அதுவே எனது தமிழறிவுக்கும் தமிழார்வத் துக்கும் காரணமாக அமைந்தது.

வினா:- தற்கால மாணவரிடம் தமிழ்மொழி அறிவும் மொழிப் பயன்பாடும் மிகத் தாழ்ந்த மட்டத்திலே இருப்பதற்கான காரணங்கள் எவையெனக் கருதுகிறீர்கள்?

விடை:- இந்நிலைக்கு முக்கியமான காரணம் தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்கள் தான். அவர்கள் போதிய தமிழறிவு அற்றவர்களாக இருப்பதை அவதானிக்கமுடிகிறது. பரந்த, ஆழமான தமிழறிவுடைய மாணவர்களை உருவாக்காத பொறுப்பைப் பல்கலைக்கழகங்களும் ஏற்றுக் கொள்ளவேண்டும். மாணவர் நிலையில் நோக்கும்போது க.பொ.த. உயர்தரத்தில் ஏனைய துறைகளுக்குச் செல்லமுடியாத மாணவர்களே தமிழ் கற்க வருகின் றார். இதுவும் வீழ்ச்சிக்கான காரணமாகும்.

### நாவல் சிறுகதை பற்றி...

வினா:- பண்டிதர்கள் பலர் நவீன இலக்கிய வடிமான சிறுகதைகளை எழுதியிருந்தாலும் அவர்கள் நவீன இலக்கியத்துக்கு எதிரானவர்கள் என்ற கருத்து ஈழத்தின் புகழ்பெற்ற விமர்சகர்கள் சிலரால் முன்வைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் நவீன இலக்கிய வடிவங்களான நாவல், சிறுகதை என்பன பற்றி உங்கள் கருத்து என்ன?

விடை:- இலக்கியங்களில் பேச்சு வழக்குத் தவிர்க்கப்படவேண்டும் என்பதே எனது கருத்தாகும். இது நாவல், சிறுகதைக்கும் பொருந்தும் என்றே நினைக்கிறேன். இந்த இலக்கிய வடிவங்கள் சமூகத்தைத் திருத்துவனவாக இருக்கவேண்டுமே தவிரச் சீரழிக்கக் கூடாது. ஒரு காலத்தில் பெருமளவாகக் காணப்பட்ட சிறுகதை எழுதுவோர் எண்ணிக்கை இன்று குறைந்து வருவதையும் நினைவூட்ட விரும்புகின்றேன்.

வினா:- தொல்காப்பியம் முதல் ஆறுமுக நாவலரின் இலக்கணச் சுருக்கம் வரை இலக்கண நூல்கள் தொடர்ச்சியாக எழுதப்பட்டுள்ள நிலையில் நீங்கள் இலக்கண நூல்களை வெளியிடவேண்டியதன் அவசியம் என்னவென உணர்கிறீர்கள்?

விடை:- தொல்காப்பியம் முதலிய இலக்கண நூல்களைக் கற்று விளங்கிக்கொள்ளக் கூடியவர்கள் இன்று பெரும்பாலும் இல்லையென்றே கூறிவிடலாம். இந் நிலையில் பண்டைய நூலாசிரியர்களின் கருத்துக்களை இக்காலத்தவர்க்கு விளங்கும்படி எழுதுவது அவசியமாகும். எனது நூல்கள் இலக்கணக் கருத்துகளை எளிமையாக விளக்குவதுடன், பல இலக்கண நூற் கருத்துக்களை ஒரே இடத்தில் தொகுத்துத் தருவனவாகவும் உள்ளன.

வினா:- உங்களது இலக்கண முயற்சிகள் மூலம் நீங்கள் மேற்கொண்ட பணிகளுக்கான இடம் உங்களுக்கு யாழ்ப்பாணச் சமூகத்தில் கிடைத்துள்ளது என எண்ணுகிறீர்களா?

விடை:- ஆம். நிச்சயமாக எனது நூல்களுக்குக் கிடைத்த ஆதரவும் இவைகள் தொடர்பாக பத்திரிகைகளில் வெளிவந்த அறிஞர்களின் கருத்துக்களும் எனக்கு மிகுந்த மனநிறைவைத் தருகின்றன.

செவ்வி: ருத்திரமகான்

(10 பக்கம் பார்க்க...)

# இலக்கியப் பொழில்

## உடலுக்கு ஊதியம் சேர்த்தால் போதுமா? உயிருக்கும் அதனைச் சேர்க்க வேண்டும்!

நாம் உடலுக்குப் பொருள் தேட எவ்வளவு பாடுபடுகின்றோம். இரவு பகல் பாராது முயற்சி செய்கிறோம். வெளிநாடு சென்று அந்நாட்டுத் தட்ப வெப்பநிலையைச் சகித்து மனைவி மக்களின் பிரிவுத் துயரைச் சுமந்து அயராது உழைக்கின்றோம். அந்தச் செல்வம் எல்லாம் உடலுக்காகவே. அந்தச் செல்வம் நாம் இறந்த பின் பிள்ளைகளைச் சென்றடையும். பிள்ளைகள் இல்லையானால் இருக்கின்றபங்காளிகள் பங்கிட்டுக் கொள்வார்கள். அப்படியானால் எப்படித் தான் உயிருக்குச் செல்வம் சேர்ப்பது? அதற்கு வழி திருவள்ளுவர் கூறுகிறார்.

"ஈதல் இசைபட வாழ்தல் அது அல்லது ஊதியம் இல்லை உயிர்க்கு" - என்கிறார்.

வறியவர்களுக்குக் கொடுத்தலும் அதனால் ஏற்படும் புகழும் உயிருக்கு ஊதியம் என்கிறார். கொடுத்ததினால் உண்டாகும் புண்ணியம் பல பிறவிகளுக்கும் உயிரைத் தொடரும். கொடுத்தத்தினால் ஏற்படும் புகழ் இம்மைப் பயனாக நின்று நிலைக்கும்.

பொருள்தேடியவன் பொருளை உயிரோடு தொடர்வதற்குச் சேமிக்கும் இடம் எது என்பதையும் திருவள்ளுவர் விளக்குகின்றார். வங்கியில் வைத்த பணம் உயிரைத் தொடராது ஆனால் பசித்தவர்க்கு உணவு கொடுத்துப் பசி தீர்த்த பணம் புண்ணியமாக மாறி உயிரைத் தொடரும் என்கிறார். பணம் உயிரைத் தொடர வேண்டுமானால் பாதுகாப் பாக வைக்க வேண்டிய இடம் பசித்தவர் வயிறு என்கிறார்.



புலவர் பார்வதிநாதசிவம்

"அற்றார் அழி பசிதீர்த் தல் அஃதொருவன் பெற் றான் பொருள்வைப் புழி" - என்கிறார்.

வறியாரது மிக்க பசியை அறம் கருதி நீக்குங்கள். பொருள் பெற்றான் ஒருவன் அதனைத்தனக்கு உதவ வைக்கும் இடம் அந்த அறமே என்கிறார்.

திருவள்ளுவருடைய அற உரையை - அறிவுரையை இவ்வுலகிற் பின்பற்றுவோர் இருக்கிறார்களா? இருந்தார்கள்! இருக்கிறார்கள்! இருப்பார்கள்!

வள்ளுவர் வழியில் பெருஞ்சித்திரனார்

பெருஞ்சித்திரனார் என்ற புலவர் குமண வள்ளலைப் பாடினார். தமிழறிந்த குமண வள்ளல் பெருஞ் சித்திரனாருக்கு பெரும் பொருள் கொடுத்தார். அந்தப் பொருளைப் பெற்று வந்த பெருஞ்சித் திரனார் தம்முடைய மனைவி யிடம் அதனைக் கொடுத்தார். வீட்டில் சேமித்து வைக்குமாறு அவர் அறிவுரைகூறவில்லை. உயிரைத் தொடரும் ஊதியமாகும்படி வழங்கச் சொன்னார்.

தம்முடைய துணைவியைப் பார்த்து "என் மனைக்கு உரியவளே! குமணவள்ளல் வழங்கிய பெரும் செல்வத்தை பாதுகாத்து வைத்துக் கொள்ளலாம்! வைத்துக் கொண்டால் வசதியாக வாழலாம்! என்று சேமித்து வைக்காதே!.

"உன்னை விரும்புவோருக்கும் கொடு; நீ விரும்புவோருக்கும் கொடு; கற்றத்தோருக்கும் கொடு. எமது பசிநீங்க முன்னர் உதவியோருக்கும் கொடு. யார் யாருக்குக் கொடுப்பது என்று என்னைக் கேளாமலேயே கொடு" என்று கூறுகிறார்.

உயிருக்கு ஊதியப் பொருளைப் பயன்படுத்தத் தெரிந்த பெருஞ்சித்திர னார் பாடல் இதோ:

நின்நயந்து உறைநர்க்கும் நீ நயந்து
உறைநர்க்கும்
யன்மாண் கற்பின் கிளை முதலோர்க்கும்
கடும்பின் கடும்பசி தீர யாழநின்
நெடுங்குறி எதிர்ப்பை நல்கியோர்க்கும்
இன்னோர்க்கு என்னாது என்னொடும் சூழாது
வல் லாங்கு வாழ்த்தும் என்னாது நீயும்
எல்லோர்க்கும் தகாடுமதி மனைகிழவோயே
பழந்தூங்கு முதிரத்துக் கிழவன்
திருந்துவேல் குமணன் நல்கியவளனே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூச்சாடிப் பிரியர்களுக்கு!

உங்களுக்குத் தேவையான ரபர் பூச்சாடிகள்
பலவிதமான வர்ணங்களிலும்
அளவுகளிலும் விற்பனையாகின்றன.
தெரிவுக்கு முந்துங்கள்.

தொடர்பு : DSI Ranpo

விற்பனை முகவர்
இல. 13, நவீனசந்தை (மேல்தளம்), ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். T.P.: 222 7621
(70246)


## யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி இல்ல மெய்வன்மைப் போட்டி - 2008

காலம்: இன்று (20.01.2008) ஞாயிற்றுக்கிழமை பி.ப.1.30மணி
இடம்: பாடசாலை மைதானம்

தலைவர்:
திரு.ச.சிவநேஸ்வரன் - அதிபர்
பிரதம விருந்தினர்:
திரு.க.கணேஷ் - அரச அதிபர், யாழ்ப்பாணம்
சிறப்பு விருந்தினர்:
திரு.ச.ரவீந்திரா - முகாமையாளர், வர்த்தக வங்கி, யாழ்ப்பாணம்.
நங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

மானிப்பாய். அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பா.அ.ச., ப.மா.ச.
(சி/551145)

## 69ஆம் வருட பிறந்த தினமும் 24ஆம் நாள் நினைவு தினமும்

அமரர்
**ஆனந்தமணி யோகநாதன்**
(யாழ்.மாநகர சபை மின் இணைப்பாளர் - ஓய்வூதியர்)



மலர்வு
20 * 01 * 1939

உதிர்வு
28 * 12 * 2007

69ஆவது பிறந்தநாள் எப்போ வரும் என்று காத்திருந்தோம்
68 ஆவது வயதில் உங்கள் உயிர் பிரிந்ததே அப்பா!
உங்கள் பிரிவால் எங்கள் குடும்பம் கலங்குதே.
உங்கள் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

குடும்பத்தினர்.
218/10, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (70270)
பஞ்சநாதன் (சகோதரன்- பாதுகாப்பு அதிகாரி, மக்கள் வங்கி).

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு
## வெளிவாரிப் பட்டப்படிப்பு பதிவு 2007/2008

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் 2007/2008 கல்வியாண்டுக்குப் பின் வரும் கற்கைநெறிகளுக்கு வெளிநிலைத் தேர்வு நாடியாகப் பதிவு செய்ய விருப்புடைய தகைமை பெற்றவர்களிடமிருந்து 31.03.2008 வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

*குறிப்பு:* மேற்படி திகதிக்குப் பின் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும் என்பதுடன் மேற்படி பதிவுகள் தொடர்பான சகல நடவடிக்கைகளும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் மட்டுமே மேற்கொள்ளப்படும்.

1) வர்த்தக முதற் கற்கைநெறி
2) கலை முதற் கற்கைநெறி
3) நுண்கலைமாணி(சங்கீதம்/நாட்டியம்) முதலாம் வருடம்
4) நுண்கலைமாணி(சங்கீதம்/நாட்டியம்) இரண்டாம் வருடம்
5) நுண்கலைமாணி (சங்கீதம்/நாட்டியம்) மூன்றாம், நான்காம் வருடம்

பின்வரும் பாடங்களில் மாத்திரம் சிறப்புக் கலைமாணி பகுதி - I கற்கை நெறிக்குப் பதிவுசெய்து கொள்ளலாம்.

இந்து நாகரிகம், வரலாறு, புவியியல், பொருளியல், தமிழ், நுண்கலை, நாடகமும் அரங்கியலும், சமஸ்கிருதம், கிறிஸ்தவ நாகரிகம், மெய்யியல், அரசறிவியல்.

| கட்டண விவரம் | ரூபா |
|---|---|
| விண்ணப்பப் படிவம் | 100.00 |
| பதிவுக் கட்டணம் | 1000.00 |
| பாடத்திட்டமும் விதிமுறைகளும் (முதற்கலை/முதல் வர்த்தக நெறிக்கானது) | 250.00 |

விண்ணப்பப்படிவத்தையும் பாடத்திட்டத்தின் பிரதியையும் நேரடியாக பெற விரும்புவோர் யாழ்.பல்கலைக்கழத்தில் இயங்கும் மக்கள் வங்கிக் கிளையில் உரிய தொகைகளைச் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்து எமது அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

தபால் மூலம் பெற விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிதியாளருக்கு எழுதப்பட்ட உரிய தொகைக்கான காசுக்கட்டளை/தபாற் கட்டளையுடன் சுயமுகவரியிடப்பட்ட ரூபா 40.00 பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட 28X20 செ.மீ. அளவுடைய தபால் உறையுடன் ***உதவிப்பதிவாளர், வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்*** என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். மேலதிக விவரங்களுக்கு 021 222 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்புகொள்ளவும்.

பதிவாளர்.
18.01.2008 (சி/551148)

## போலிக் கௌரவம் ...

(07பக்கத் தொடர்ச்சி)

ஆகவே "சுந்தர்! மனைவி இறந்தால் இன்னொரு மனைவி. கணவன் இறந்தால் இன்னொரு கணவன். காதலி கைவிட்டால் வேறொரு காதலி. இந்த முறையில் செல்லுகிறது உலகம். ஆனால் உற்றார், பெற்றாரை இழந்தால் மீண்டும் பெற முடியாது. என்னை மறந்து விடுங்கள். உங்களுக்கு பிடித்த - அது இயலாது - சுற்றத்தவர்கள் விரும்பும் ஒருத்தியை மணந்து இன்பமாக வாழுங்கள்" என்றேன். எப்படித்தான் இதைச் சொல்ல முடிந்ததோ?

"இதுதான் உன் முடிவா?" என்றார் ஏக்கத்துடன்! "ஆம்" என்றேன் உறுதியாக. அவர் சென்றுவிட்டார். இராசாத்தி! கோழைகள் காதலிக்கக் கூடாது. காதலிக்கவே கூடாது. காதல் உலகத்தை எட்டிப் பார்க்கவே அவர்கள் அருகதையற்றவர் கள். வெகு வெகு தூரம்.

"விட்டாரின் கைப் பொம்மைகளாக ஆட்டி வைத்தபடியெல்லாம் ஆடினோம். எந்தக் கைச்சாத்து "இன்பப்' பூங்காவிற்கு அழைத்துச் சென்றதோ அதே கைச்சாத்து எம்மைப் பிரித்துத் துன்பக் கேணிக்குள் ஆழ்த்திவிட்டது. எங்கோ மறைந்துவிட்ட சுந்தர் நோயாளியாக ஒரு வைத்தியசாலையில் இருந்ததைக் கண்டு அவரது நண்பன் அவரை ஊருக்கு அனுப்பி வைத்துள்ளான் என அண்ணா எழுதியுள்ளார்" என்றாள், கைக்குள் முகத்தைப் புதைத்து விம்மிக்கொண்டே. நான் என்செய்வேன்? மனநோய்க்கு மருந்தேது? இயன்றவரை தேறுதல் கூறினேன். அதன் பின் அடிக்கடி வெளியிடங்களுக்கு - கேளிக்கை கொண்டாட்டங்களுக்கு - அழைத்துச் சென்றேன். சூழ்நிலை மாற்றத்தால் உடல் நிலையிலும் மாற்றம் ஏற்பட்டது.

இராசாத்தி! இன்பகாலத்தில் என்னை மறந்தாலும் உனக்குத் துன்பம் வரும் நேரத்தில் என்னை நினை. அந்த நினைவே உனக்கு ஆறுதல் தரும்" என்று நினைவுமலரில் எழுதினாயே, அது எவ்வளவு தூரம் பலித்துவிட்டது என்று அடிக்கடி கூறுவாள்.

அன்று.. "அக்கா!, புஸ்பாக்கா வாறா" என்று ஓடினாள் இரதி. என் பயிற்சிக் கலாசாலைத் தோழி எப்படி என்று பார்ப்பதற்கு விழுந்து ஓடினாள் தர்மா. கதவண்டையில் புஷ்பாவின் அண்ணாவுடன் மோதிக்கொண்டாள். எல்லோரும் சிரித்தனர். நாணம் மேலிட "தயவுசெய்து மன்னிக்க வேண்டும்" என்று நிமிர்ந்த தர்மா மோதினதால் ஏற்பட்ட அதிர்ச்சியினால் மயங்கிக் கீழே சாய்ந்தாள். அவளுக்கு முதலுதவி அளிக்கப்பட்டது. பிரமை பிடித்தவள் போல் உட்கார்ந்திருந்த புஷ்பாவின் அண்ணாவை நான் கவனிக்கவில்லை. சிறிது நேரம் சென்றது.

"சுந்தர்" தர்மாவின் வாய் முணுமுணுத்தது.

"என்ன சொல்கிறாள்" புஷ்பாவின் கேள்வி.

"பாவம் அவள் வாழ்க்கையில் ஓர் ஏமாற்றம். அவள் காதலன் தான் சுந்தர்." என்றேன்.

புஷ்பா உடனே தர்மாவை உற்று நோக்கிவிட்டு, அதிசயத்துடன் தமையனைப் பார்த்தாள். அவர் "ஆம்" என்ற குறியில் தலையை அசைத்தவாறு கைக்குட்டையால் கண்ணைத் துடைத்தார். நான் விழித்தேன்.

'என் அண்ணாதான் சுந்தர்'. என்று புதிரை அவிழ்த்தாள் புஷ்பா.

என்ன அதிசயம்! இலங்கையின் ஒரு மூலையில் கூடினார்கள். பிரிந்தார்கள். அமைதியை நாடி மூலைக்கு மூலை ஓடினார்கள் இன்னொரு மூலையில் மீண்டும்.. இதுதான் விதியா? அல்லது பரிசுத்த தூய்மையான அன்பின் பிரதிபலிப்பா?

விஷயம் விளங்காது திகைத்த என் தங்கைக்கு விஷயம் விளக்கப்பட்டது. அவர் மனம் இவ்வளவு பாகாய் உருகுமென நாங்கள் எதிர்பார்க்கவில்லை. ஏன்? அவரும் அத்தந்தையரின் கூட்டத்தில் ஒருவர் தானே.

"என்னாலானவற்றைச் செய்கிறேன் கவலைப்பட வேண்டாம்" என்றார் அப்பா. அவர் பேச்சுக்குத்தான் "அப்பீல்" கிடையாதே.

நாள்கள் நகர்ந்தன. தை மாதமும் வந்தது. தை பிறந்தால் வழிபிறக்கும் என்பார்களே. என் தந்தையின் முயற்சியின் பலன் தர்மாவுக்கு வழி பிறந்துவிட்டது. என் கையில் சிரஞ்சீவி சுந்தரத்தினதும் சௌபாக்கியவதி தர்மநாயகி அவர்களினதும் திருமண அழைப்பிதழ். திருமணத்திற்கு வேண்டிய வேலைகளை ஆயத்தம் செய்யத் தொடங்கினேன். கௌரவம் உடைய தலைவர்களைப் பார்க்க இது ஓர் அரிய சந்தர்ப்பம் அல்லவா?

(1955)

(நன்றி: ஈழகேசரிச் சிறுகதைகள்)

### தவறிவிட்டது

ஞானசேகரம் சிந்துஜா என்பவருடைய தே.அ. அட்டை (907122786V) கடந்த 05.01.2008 அன்று உடுவிலுக்கும் திருநெல்வேலிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் அ.அட்டையில் உள்ள விலாசத்தில் ஒப்படைத்து உதவவும்.

### தவறிவிட்டது


திருமதி அ.மேரிலூக்கிரேசியா என்பவரின் தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்த விண்ணப்ப அடிக்கட்டை (738653912V) கடந்த 28.12.2007 அன்று யாழ்.நகரப்பகுதியில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து அச்சிட்டையில் உள்ள முகவரிக்கு கிடைக்க ஆவணசெய்யுமாறு கேட்டுக்கொள்கின்றேன். (கண்டெடுத்துத் தருபவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்). (70254)


### வீட்டுடன் காணி விற்பனைக்கு

மானிப்பாயில் யாழ்ப்பாண வீதியில் மகளிர் கல்லூரிக்கு முன்னால் 2½ பரப்பில் ஐந்து அறை வீட்டுடன் கூடிய காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு [illegible]
[illegible] 9610
(சி/551151)

### குளிரூட்டிய நவீன CAR வாடகைக்கு


* டொல்பின் வான் மினி பஸ்களும் வாடகைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்பு: ரட்ணம்
சோமசுந்தரம் பாலர் பாடசாலை,
22, சோமசுந்தரம் அவனியு, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
0777-903090
021-222-7839


## தேவை - சாரதி

கொழும்பில் உள்ள பிரபல கம்பனி ஒன்றின்
உயர் அதிகாரிக்கு அனுபவம் வாய்ந்த
**வாகனச் சாரதி ஒருவர் தேவை**
45 வயதுக்கும் 65 வயதுக்கும்
இடைப்பட்டவர்கள் விரும்பத்தக்கது.
சிங்களம் பேசத் தெரிந்திருக்க வேண்டும்.
முன்னர் கொழும்பில் சாரதியாகப் பணியாற்றிய
அனுபவம் உடையவர்கள் விரும்பத்தக்கது.
தங்குமிட வசதி, உணவு மற்றும் பிற சலுகைகள்
உண்டு. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
*முழுமையான சுயவிபரங்களுடன் விண்ணப்பிக்கவும்.*
த.பெ.இல: 2129,
கொழும்பு தொ.பே: 011 - 2366042
(சி/551138)


இதோ!
## மீண்டும் ஆரம்பம்







## மணியம் இம்பெக்ஸ்

இது வரை மூடப்பட்டிருந்த எமது ஸ்தாபனம்
(01.12.2007 இல் ஏற்பட்ட தீ விபத்து காரணமாக)
மீண்டும் 19.01.2008 நேற்று முதல் அதே முகவரியில் இயங்குகின்றது என
எமது வாடிக்கையாளர்களுக்கு மன மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.





எம்மிடம் TV, Deck, Dish Antana, Radio,
கேபிள் TV உபகரணங்கள்,மற்றும்
வீட்டு மின்சாரப் பொருட்கள் என்பவற்றைப் பெற்றுக்கொள்ளலாம்

**மணியம் இம்பெக்ஸ்**
75 (121 A) கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.
T.P: 021 222 2819




## கண்ணீர் அஞ்சலி

திருமதி
**சர்வேஸ்வரன் (ஈசன்) கேதீஸ்வரி**



அவர்களின் திடீர் மறைவையொட்டி துயரடைகின்றோம். அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கந்தையா வீதி, சாவகச்சேரி. (சி/551144)
பி.சந்திரன் குடும்பம், சி.பொ.இரத்தினம் குடும்பம்.

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில
16 . 03 . 1967



ஆண்டவன் அடியில்
10 . 02 . 2006

**அமரர் கெங்காதரன் கணேசலிங்கம்**

திதி: திரயோதசி 20.01.2008

அன்பே வடிவான எம் அப்பா!
நீங்கள் இப் பூவுலகை விட்டு
மறைந்து ஈராண்டுகள்
கடந்து விட்டன - இன்றும்
உங்கள் நினைவுகள் எம்மை
வாட்டி வதைக்குதப்பா.

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

344, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். (70269)
தகவல்: மனைவி, பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநகர சபை, யாழ்ப்பாணம்.

# பனியிலே பியானோ



இசை கேட்டால் உருகாதவர்களே இருக்க முடியாது என்று சொல்வார்கள். ஆனால் உருகும் பனியில் சீனாவில் பியானோ இசைக்கருவியை உருவாக்கி அசத்தி இருக்கின்றனர் சீனாவில் உள்ள ஹார்பின் எனும் நகரில் தற்போது சர்வதேச பனிச் சிற்பக் கண்காட்சி நடைபெற்று வருகிறது.

இதனை முன்னிட்டு பல்வேறு பனிச் சிற்பங்கள் இங்கே காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கிறது. இவற்றில் அனைவரையும் கவர்ந்திருக்கிறது பனிப் பியானோ. பனிக்கட்டிகளாலேயே உருவாக்கப்பட்டுள்ள இந்தப் பியானோ இசைக் கருவி 30 விதமான மெட்டுக்களைப் பாடிக்காட்டுகிறது. ஆனால் ஒன்று குளிர்காலம் முடிந்ததும் இந்த இசைக்கருவி வழிந்து விடுமாம்.

# கத்தி வைத்திருந்தால் சிறை




டென்மார்க்கில் கடந்த காலங்களில் கத்திக் குத்து வாராந்த பிரச்சினையாக இருந்து வருவது தெரிந்ததே. இந்த வகையில் இரவு நேரங்களில் சட்டத்திற்கு முரணாகக் கத்தியுடன் செல்வோர் தொகையை கட்டுப்பாட்டில் கொண்டுவர புதிய சட்டம் அமுலுக்கு வருகிறது. நாடாளுமன்றத்தில் இப்பிரேரணைக்கு அதிகப்படியான ஆதரவு கிடைத்துள்ளது. அரசாங்க ஆதரவுக் கட்சிகளுடன், நியூ அலையன்ப் றடிகலவென்ஸ்ர், எஸ்.எப் ஆகிய கட்சிகளும் இதற்கு முழு ஆதரவு வழங்கவுள்ளன. வருங்காலத்தில் சட்டத்திற்கு முரணான கத்தியை முன்னர் ஒரு தடவை கொண்டு சென்றதாக அறியப்பட்டவர் கத்தியுடன் அகப்பட்டால் அவருக்கு சிறைத்தண்டனை கிடைக்கும். நாடு முழுவதும் பொலிஸார் இது குறித்த தீவிர சோதனைகளில் ஈடுபட்டு கத்தியுடன் செல்வோரை மடக்க வேண்டுமெனவும் அகப்படுவோர் தாமதமின்றிச் சிறையில் தள்ளப்பட வேண்டும் எனவும் கட்சிகள் விதந்துரைத்துள்ளன. டேனிஸ் மக்கள் கட்சி இது குறித்த விவாதத்தை உடனடியாக முன்னெடுத்து சட்டத்தை அமுல் செய்ய வேண்டும்மெனக் கோரியுள்ளது. சட்ட அமுலாக்கலை தாமதிக்கத் தாமதிக்க உயிரிழப்புகள் அதிகரிப்பதாகவும் அது கூறுகிறது. இது போன்ற சட்டம் நோர்வேயில் கடந்த 1993 இல் கொண்டுவரப்பட்ட பின்னர் கத்திக் குத்து எண்ணிக்கை 31 வீதம் குறைவடைந்தது குறிப்பிடத்தக்கது.

# கனடாவில் தயாராகும் மலரே மௌனமா?




கனடாவில் உள்ள கலைஞர்கள் தற்போது தமது திரைப்பட முயற்சிகளை இடைவிடாது தொடர்ந்து வருகின்றனர். கனடாவில் உள்ள திரைப்பட தயாரிப்பு முயற்சிகளில் தொடர்ந்து ஈடுபட்டுவரும் ரவி அச்சுதனின் கைவண்ணத்தில் உருவாகியிருக்கிறது 'மலரே மௌனமா' என்ற புதியபடம். 'மெதுவாக உன்னைத் தொட்டு' திரைப்படத்தை வழங்கிய ஸ்வேதா சினி ஆர்ட்ஸ் வழங்கும் எஸ். பரராஜசிங்கத்தின் தயாரிப்பால் வெளிவருகிறது இப்படம். இப்படத்தின் கதையை அருணும், திரைக்கதை வசனத்தை ஜீவரத்தினமும், பாடல்களை லோகேந்திரலிங்கம், காதல்மதி ஆகியோரும் வழங்கியுள்ளனர். படத்தின் இசையை உத்திரியன் வழங்கியுள்ளார். இலங்கையில் இருந்து புறப்பட்ட அகதிகள் ஒரு இடத்தில் சிக்குண்டு, தாம் கடந்துவந்த நாள்களை நினைவு கூருவது என்ற பின்னணியில் அமைக்கப்பட்டுள்ளது கதை. படப்பிடிப்பு யாவும் முடிவடைந்து தற்போது தொகுப்புப் பணிகள் நடைபெறுகின்றன.


# முட்டையை வேக வைக்க எவ்வளவு நேரம் ஆகும்?



முட்டையை வேக வைக்க எவ்வளவு நேரமாகும் என்ற கேள்விக்கு பிரிட்டனில் உள்ள பலர் பூச்சியம் மதிப்பெண் பெற்றுள்ளார்கள்.

பிரிட்டனில் முட்டை மிகவும் முக்கியமான உணவாக இருக்கிறது. ஆனால் தற்போது அதன் முக்கியத்துவம் குறைந்து வருகிறதாம். இந்நிலையில் பிரிட்டனில் உள்ள இளைஞர்கள் மத்தியில் முட்டையை வேக வைக்க எவ்வளவு நேரமாகும் என்னும் கேள்வி கேட்கப்பட்டது. இதற்குப் பதிலளிக்க பலருக்கு சரியான பதில் தெரியவில்லை. முட்டையை வேக வைக்க 3 நிமிடம் போதும் என்பது சிலருக்கு மட்டும் தான் தெரிந்திருக்கிறது. மற்றவர்கள் 10 நிமிடமாகும் 15 நிமிடமாகும் எனத் தப்பாகப் பதிலளித்து உள்ளனர்.

# அழியும் கடற்புற்கள்



கடல் வாழ் உயிரினங்கள் பலவற்றுக்கு கடற் புற்களே உணவு ஆதாரமாக உள்ளன. ஆண்டு ஒன்றுக்கு ஒரு சதுர மீற்றர் பரப்பில் சுமார் 550 முதல் ஆயிரம் கிராம் கார்பனை நிலைப்படுத்தும் திறனைக் கடற் புற்கள் கொண்டுள்ளன. ஆனால் கடலில் தற்போது காணப்படும் மீனவர்களின் இழுவலை மீன்பிடிப்பினால் கடற் புற்கள் அழிக்கின்றன. கடற்கரையோரத் தொழிற்சாலைகளின் கழிவு நீர் ஏற்படுத்தும் உயிர்ச் சத்து அதிகரிப்பு, கடல் மாசுபடுதல், உப்புத் தன்மையில் மாற்றம் போன்றவற்றால் கடற்புற்கள் அழிகின்றன. ஆனால் மின் நிலையத்தில் இருந்து வெளியேற்றப்படும் சாம்பல் துகள்கள் மற்றும் அதிக வெப்பமான நீர் கடற்புற்றக் வளர்ச்சியைப் பாதிக்கின்றது. வளம் குன்றிய இடங்களில் கடற்புற்களைப் பயிரிட்டு, குறையும் கடற் புற்களின் அளவைப் பாதுகாப்பது உடனடித் தேவையாகும் என உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரித்துள்ளது.

# சிறுநீர் கழிக்கும்போது உண்டாகும் சிரமங்களுக்கு சிகிச்சைபெறத் தாமதித்தால் சிறுநீரகம் பாதிப்புறும்

சுகநலம்

வினா 1 - ஆண், வயது 16. எனக்கு சிறுநீர் வெளியேறும் போது அதனுடன் இரத்தமும் வெளியேறுகின்றது. இதற்குக் காரணம் என்ன? நான் என்ன செய்ய வேண்டும்?

விடை 1 - சிறுநீர் கழிக்கும் போது சிறுநீருடன் இரத்தம் வெளியேற பல்வேறு காரணங்களுள்ளன. இவ்வாறான நிலைமை ஏற்பட உங்கள் சிறுநீர் வழியில் ஏற்படக்கூடிய கற்கள், சிறுநீர்ப்பாதையிலான கிருமித் தொற்று, சிறுநீர் வழியில் கட்டிகள் வளருதல் அல்லது சிறுநீரக நோய்கள் (உதாரணமாக நெப்ரைட்டிஸ்) போன்றன முக்கிய காரணங்களாக அமைகின்றன.

மற்றும் நீங்கள் யாதாயினும் மருந்து உதாரணமாக கசரோகத்திற்கு பாவிக்கும் (Rifampicin) பாவிப்பவராயின் அவை உங்கள் சிறுநீரில் நிறமூட்டலை ஏற்படுத்துவதாலும் உங்களுக்குச் சிறுநீருடன் குருதி வெளியேறுவ்வது போன்ற தோற்றம் ஏற்படலாம்.

நீங்கள் உங்கள் சிறுநீருடன். இரத்தம் வெளியேறுகின்றது எனக் குறிப்பிட்டிருப்பதனால், ஒரு தகுதிவாய்ந்த வைத்திய நிபுணரை அணுகி பரிசோதனைகள் மூலம் காரணத்தைக் கண்டறிந்து தேவையான சிகிச்சையைப் பெற்றுக்கொள்வது அவசியமாகும்.

ஏனெனில் தொடர்ச்சியாகச் சிறுநீருடன் இரத்தம் வெளியேறும் நிலையானது காலப்போக்கில் உங்களின் சிறுநீரகத்தை முற்றாகச் செயலிழக்கச் செய்யவும் வாய்ப்புக்கள் காணப்படுகின்றன. நீங்கள் உடனடியாக உரிய சிகிச்சையை பெற்றுக்கொள்ளும் பட்சத்தில் பாதகமான நிலைமைகள் ஏற்படுவதைத் தடுத்துக் கொள்ளலாம்.

வினா 2 - ஐயா, எனது வயது 91, சர்க்கரை வியாதி இல்லை. மதுபானம் பாவிப்பது இல்லை. தாழ்வு இரத்த அழுத்தம் உண்டு. எனக்கு இரவில் சலம் அடிக்கடி கழிக்க வேண்டி ஏற்படுகின்றது. 4-5 தடவைகள் நித்திரையில் எழும்பி சலம் கழிக்கின்றேன். இது ஏன் ஏற்படுகின்றது? இதனை நிவர்த்தி செய்ய நான் என்ன செய்ய வேண்டும்? தகுந்த ஆலோசனை தரவும்?

விடை 2 - உங்கள் வயதையும் நீங்கள் கூறும் அறிகுறிகளையும் வைத்துப்பார்க்கும் போது உங்கள் முன்னிற்கும் சுரப்பியில் (Prostate) ஏற்பட்டுள்ள வீக்கம் இதற்குக் காரணமாக அமைய வாய்ப்புக்களுள்ளன. இந்நிலமையானது சாதாரணமாக 50 வயதுக்கு மேற்பட்ட ஆண்களில் ஏற்படக்கூடியது. வயது அதிகரிக்க அதிகரிக்க நோய் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகளும் அதிகம். இச்சுரப்பியானது ஆண்களின் சிறுநீர்ப்பையின் அமைவிடத்திற்கு கீழே சிறுநீர்ப்பையிலிருந்து சிறுநீர் வெளியேறும் குழாயைச் (Urethra) சூழ்ந்து காணப்படுகின்றது. எனவே இச்சுரப்பியில் ஏற்படும் வீக்கமானது சிறுநீர்ப்பாதையை ஒடுங்கச்செய்வதால் சிறுநீர் சிறுநீர்ப்பையிலிருந்து வெளியேறுவது பகுதியாக தடைசெய்யப்படுவதுடன் காலப்போக்கில் முற்றாகவும் தடுக்கப்படலாம்.

"மருத்துவ ஆலோசனை"
சமுதாய மருத்துவத்துறை,
மருத்துவ பீடம்,
யாழ். பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.

பகுதியாகத் தடைப்பட்டிருக்கக்கூடிய நிலைமைகளில் சிறுநீர் கழிக்கும் போது சிறுநீர்ப்பையானது முற்றாக வெறுமையாக்கப்படாது. இதனால் சிறுநீர்ப்பை சிறிது நேரத்திலேயே மீளவும் நிரம்பிவிடும். இதன் காரணமாகவே உங்களுக்கு மேலே குறிப்பிட்டவாறான அடிக்கடி சிறுநீர் கழிக்கும் நிலைமை ஏற்பட்டு இருக்கலாம்.

இவற்றுடன் சிறுநீர் வெளியேறும் போது சிறுநீர் காலுக்கண்மையில் விழுதல் அதாவது வீச்சம் குறைவாக இருத்தல், சிறுநீர் விட்டு விட்டுவருதல், சிறுநீர் கழித்து முடிக்கும் தறுவாயில் நீண்டநேரம் துளித்துளியாக வெளியேறுதல், சிறுநீர் திருப்திகரமாக கழிக்காதது போன்ற உணர்வு போன்றன இந்நோய் நிலைக்கான மேலும் சில அறிகுறிகளாகும்.

இவ் அறிகுறிகள் காலம் செல்லச் செல்ல மேலும் கடுமையாகி முற்றுமுழுதாக சிறுநீர் வெளியேறாத நிலைமை ஏற்படலாம். மேற்படிப் பிரச்சனைக்குத் தீர்வுகாண நீங்கள் ஒரு தகுதிவாய்ந்த சத்திரசிகிச்சை நிபுணரை அணுகுவது அவசியம். அவரின் ஆலோசனைக்கு அமைய மாத்திரைகள் மூலமாகவோ, சத்திர சிகிச்சை மூலமாகவோ தீர்வு காணலாம்.

வினா 3 - வயது 26, ஆண், எதுவித தீய பழக்க வழக்கங்களும் கிடையாது. எனது ஆண்குறியின் முனைப்பகுதியின் மெல்லிய தோல்பகுதி அழற்சியடைந்து காணப்படுகின்றது. காலையிலும் மாலையிலும் உடல் சுத்தம் செய்யும்போது, அப்பகுதியை நீரினால் கழுவி விடும்பொழுது சிவந்து காணப்படும். பின்னர் சிலமணி நேரங்களின் பின்னர் மெல்லிய படை போன்று ஒன்று தோன்றியிருக்கும். இவற்றை இல்லாது செய்ய என்ன பூச்சு மருந்து பாவிக்க முடியும்? தங்களின் ஆலோசனையை எதிர்பார்க்கின்றேன்.

விடை 3 - உங்களது ஆண்குறியின் முன்பகுதித் தோல் அழற்சியடைந்திருப்பதாக குறிப்பிட்டுள்ளீர்கள், அத்துடன் சிவந்து காணப்படுவதாகவும், சிறிய படை போன்று தோன்றுவதாகவும் கூறியுள்ளீர். இந்நிலைமையானது ஆண்குறியின் முன்பகுதி தோலில் பக்றீரியா அல்லது பங்கசு கிருமித் தொற்றினால் ஏற்பட்ட அழற்சியாக (Posthitis) இருக்கலாம். இது அனேகமாக உமது ஆண்குறியின் முனைப் பகுதியையும் (Glans penis) பாதித்திருக்கலாம் (Balanitis).

இந்நிலைமையானது தொடர்ந்து காணப்படின் முன்தோற்பகுதி தடிப்படைந்து சுருக்கமடையும் நிலைமையோ (Phimosis) அல்லது சிறுநீர் வழித்தடங்கலோ (Urethral stricture) ஏற்பட்டு சத்திர சிகிச்சைக்கு உட்படவேண்டி ஏற்படலாம். உடனடியாக ஒரு வைத்தியரை அணுகி சிகிச்சை பெற்றுக்கொள்வது மேற்படி நிலைமைகளிலிருந்து உங்களைப் பாதுகாத்து சுகவாழ்வை ஏற்படுத்தும்.

இதற்கு நீங்கள் கிருமித்தொற்றுக்கு எதிரான மாத்திரைகளை (anti bacterial or anti fungal) பாவிப்பதன் மூலமும் ஆண்குறியை சுத்தமாக வைத்திருப்பதன் மூலமும் தீர்வைப் பெற்றுக்கொள்ளலாம்.

பிற்குறிப்பு:- நீங்கள் உடலுறவில் ஈடுபடுபவராயின் இது பாலியினை நோயாகக்கூட இருக்கலாம். மேலும் உங்கள் இரத்தத்தில் குளுக்கோசின் அளவைத் தெரிந்துகொள்வதும் நல்லது ஏனெனில் மேற்படி நிலைமையானது சலரோகத்தினாலும் ஏற்பட வாய்ப்புகளுண்டு.

வினா 4 - எனது மகளுக்கு வயது 4. அவவிற்கு காதுக்கும் கழுத்துக்கும் அண்மையில் வீக்கம் போன்று ஆரம்பித்து பின்பு இரண்டு குமிழ்கள் போன்று சிவப்பு நிறத்தில் கட்டிகள் வந்தன. அவற்றைத் தொட்டுப் பார்த்தால் அடியில் கட்டிபோன்று தடிப்பாகவும் மேல் பகுதி மென்மையாகவும் இருந்தது மேல்பகுதி வெப்பம் போன்ற தன்மையுடன் காணப்பட்டது. நாம் வைத்தியசாலையில் காட்டியபோது சத்திர சிகிச்சை மூலம் அவற்றை அகற்றினார்கள். இப்பொழுது இரண்டு மாதங்கள் ஆகிவிட்டன புண் மாறிவிட்டது ஆனால் நெறி போன்று ஒரு சின்னக் கட்டி காணப்படுகின்றது. இதற்கான காரணம் எமக்குத் தெரிய ஆவலாக உள்ளது. தயவு செய்து அறியத்தரவும்.

விடை 4 - ஏற்கனவே உங்களது மகள் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகக் குறிப்பட்டுள்ளீர். எனவே மேலதிக வைத்திய ஆலோசனைகளுக்கு அவரின் முன்னைய வைத்தியக் குறிப்புகள் மிகவும் அவசியம்.

அவரிற்கான நோய் நிர்ணயம் மற்றும் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டமைக்கான காரணம் என்பவற்றினடிப்படையில் தற்போதைய பிரச்சனையை இனம் காண்பது, சிகிச்சையளிப்பது இலகுவாக இருக்கலாம்.

உங்கள் கேள்விகளுக்கு
மருத்துவ நிபுணர்கள்
பதில் தருகிறார்கள்

எனவே சகல வைத்தியக்குறிப்புகளுடனும் யாழ் போதனா வைத்தியசாலையின் சத்திர சிகிச்சை கிளினிக்கை வெளிநோயாளர் பிரிவினூடு அணுகினால் தகுந்த ஆலோசனையை, சிகிச்சையைப் பெற்றுக்கொள்ளலாம்.

கீழ்கண்ட முகவரிக்கு கடித மூலமாகவோ, தொலைபேசி எண்ணுக்கு SMS மூலமாகவோ தொடர்புகொண்டு உங்கள் வினாக்களைப் பதிவு செய்யலாம். அத்துடன் அருகில் காணப்படும் சின்னத்துடன் எம்மால் நிறுவப்பட்டுள்ள வினா சேகரிப்பு பெட்டிகளில் உங்கள் வினாக்களை இடுவதன் மூலமும் அவை எம்மை அடைவதை உறுதிப்படுத்திக்கொள்ள முடியும். உங்கள் கேள்விகளும் பதில்களும் பிரதி ஞாயிறு தோறும் உங்கள் உதயனில் பிரசுரமாகும்..

*(உங்கள் வினாக்களில் வயது, பால் என்பன கட்டாயம் இணைக்கப்பட்டிருக்க வேண்டும்.)*

*மருத்துவ ஆலோசனை*
மருத்துவபீடம், ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி. *T.P:0777 179268*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நற்செயல்களால் ஒளியேற்றுவோம்

மாலைதீவு ஜனாதிபதியை ஒருவர் கத்தியால் குத்த முயன்றவேளை 15 வயதுச் சிறுவன் ஒருவன் அந்தக் கத்தியைப் பறித்து ஜனாதிபதியைக் காப்பாற்றினான். அச் சிறுவனின் தைரியத்தையும் உதவும் மனப் பாங்கையும் ஜனாதிபதியும் அந்நாட்டு நாடாளுமன்றத்தினரும் பாராட்டினர். ஒல்லாந்து நாட்டின் பாரிய குளமொன்றின் மதில் சுவரில் இருந்து நீர் கசிவதைக் கண்ட சிறுவன் ஒருவன் தனது கையால் அதை அடைத்து அழிவிலிருந்து நாட்டைக் காத்தான்.

இச் சிறுவர்கள் போன்று பிறரின் துயர் போக்க தம்மைத் தியாகம் செய்த பலர் உலக வரலாற்றில் பாராட்டப்பட்டுள்ளனர்.

ஒரு செயலைச் செய்த பின்பே பாராட்டுக்களும் கௌரவங்களும் ஒருவரைச் சென்றடைகின்றன.

ஆனால், பிறக்கும் முன்பே அவர் செயல்கள் ஊடாக மாட்சி உண்டாகும் என இறைவன் கூறுவதாக எசாயா இறைவாக்கினர் தமது நூலில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். 'உன் வழியாய் நான் மாட்சியுறுவேன்'

(எசா 49:3)



துன்ப துயரில் ஆழ்ந்துள்ள மக்கள் அதிலிருந்து விடுவிக்கப்படுவதால் விடுவித்தவரை மாட்சிப் படுத்துவார்கள். இவ்வாறு உலகம் முழுவதையும் மீட்படையச் செய்யும் செயல் யேசுவில் நிறைவேறுகின்றது.

யோவான் நற்செய்தி நூலில் இயேசுவே உலகின் பாவங்களைப் போக்குபவர் எனத் திருமுழுக்கு யோவான் சான்று பகர்கின்றார்.

இயேசு இவ்வுலகில் பணியாற்றிய நாள்களின் மக்களின் மீட்புக்காகத் தம்மை முழுமையாகக் கையளித்து தியாகப் பலியானார். இதனால் தந்தையாம் இறைவனுக்கு மாட்சிமை உண்டாகியது.

இயேசுவின் மீட்புப் பணியை இவ்வுலகில் தொடர்ந்தும் நிறைவேற்றிவருவது எம் ஒவ்வொருவரினதும் கடமையாகும். தீமையின் பிடியிலுள்ளவர்களை விடுவித்து சுயாதீனமான, தூய மக்களாக வாழ வழிகாட்டுவதே உன்னதமான பணி; 'இயேசு கிறீதுவே ஆண்டவர்' என அறிக்கையிடும் பணி.

இத்தகைய பணியை நிறைவேற்றுபவர்களுக்குக் கடவுளிடமிருந்தும் இயேசு கிறிஸ்துவிடமிருந்தும் அருளும் அமைதியும் உரித்தாகும். தீமை என்ற இருள் எம் மத்தியிலிருந்து அகல எமது நற்றெயல்களால் ஒளியேற்றுவோம்.

- சின்னப்பர் -

வடமராட்சி நெல்லியடியில்

மாதுஜன் கிளினிக்
MATHUJAN CLINIC

கொடிகாமம் வீதி, நெல்லியடி.

21.01.2008 திங்கள் முதல்

மாதுஜன் கிளினிக்

உங்களுக்காக செயற்படுகிறது ...

M.B.B.S. வைத்திய நிபுணர்கள்
உங்களுக்கு உதவ இருக்கிறார்கள்.

திங்கள் முதல் வெள்ளிவரை
மாலை 4.00 - 5.00 மணி வரை
வைத்திய நிபுணர்களின் ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளலாம்.
மேலும்
* இரத்தம், சலம் பரிசோதித்தல்
* மருந்து கட்டுதல்
* எக்ஸ்ரே, ஈ.சீ.ஜீ. வசதிகள் ஆகிய சேவைகளும் வழங்கப்படும்.

மேலதிக தொடர்புகளுக்கு:
மாதுஜன் மெடிக்கல்ஸ்
கொடிகாமவீதி, நெல்லியடி.
(P/551152)

# போர் நிறுத்தத்திலிருந்து விலகியமை உலக நாடுகளை அழவைத்துள்ளது

## பிரிட்டிஷ் லிபரல் கட்சித் தலைவர் கூறுகிறார்



கொழும்பு,ஜன.20

இலங்கையில் முப்பது ஆண்டுகளாக நீடித்துவரும் உள்நாட்டுப்போர் மற்றும் வன்முறைகளைக் கண்டு உலக நாடுகள் கண்ணீர் சிந்தியிருக்கின்றன. இப்போது போர் நிறுத்த ஒப்பந்தத்திலிருந்து இலங்கை அரசு அதிகாரபூர்வமாக விலகியிருப்பதைப் பார்த்து மீண்டும் ஒரு முறை அழவேண்டியிருக்கின்றது.

இவ்வாறு கவலையை வெளியிட்டிருக்கின்றார் பிரிட்டிஸ் நாட்டு லிபரல் ஜனநாயகக் கட்சியின் தலைவர் சைமன் ஹியுஸ்.

இலங்கையின் தற்போதைய நிலைமைகள் குறித்து பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் கடந்த வியாழக்கிழமை ஒத்திவைப்புத் தீர்மானம் ஒன்றை சைமன் ஹியுஸ் கொண்டுவந்திருந்தார்.

அத்தீர்மானத்தை தாம் கொண்டு வந்ததன் நோக்கம் குறித்து பிபிசி சிங்கள சேவைக்கு அவர் பேட்டி ஒன்றை வழங்கியிருந்தார் அப்பேட்டியில் அவர் இக்கவலையை வெளியிட்டிருக்கின்றார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இலங்கையில் நடக்கும் விடயங்கள் பிரிட்டனுக்கும் பொதுநலவாய நாடுகளுக்கும் பொதுவாகவே முக்கியத்தவம் வாய்ந்தவையாக இருக்கின்றன. குறிப்பாகப் பிரிட்டனில் வாழும் இரண்டரை லட்சம் இலங்கையர்களுக்கு இது முக்கியமான விடயம்.

இன்னும் அதிகமான வன்முறைகளும் கொலைகளும் எதிர்வரும் மாதங்களில் நடக்கக்கூடும் என்று கவலையாக இருக்கின்றது. அதனால் இந்தப்பிரச்சினை குறித்து விவாதிப்பது பொருத்தமாக இருக்கும் என்ற காரணத்தால் நாடாளுமன்றத்தில் பிரேரணை ஒன்றை கொண்டு வந்தேன். நாடாளுமன்றத்தில் அங்கள் வகிக்கும் பிரதான கட்சிகளைச் சேர்ந்தவர்களும் முக்கியமாக பங்கேற்று தமது கருத்துக்களை வெளியிட்டனர்.

(202)

TCT Beauty Centre

மணப்பெண் அலங்காரம் (Facial, Eyebrow, Threading, Waxing), Cake Icing போன்ற அழகு சேவைகளுக்கு தொடர்பு கொள்ளவும். தொ.பே. 0779067544

தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் யாழ்.மாவட்ட அலுவலகத்தின் ஆதரவுடன் தியாகி அறக்கொடை நிறுவனம் நடத்தும் அழகுக் கலை பயிற்சி (Cake Icing, Flower Making, Facial, Hair Style, Fabric Painting, Handicraft, Dress Making) புதிய வகுப்புகள் ஆரம்பம்.

இடம் : 258, நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
ஆரம்பம் : இன்று (04.01.2008) வெள்ளிக்கிழமை

## கண்ணீர் அஞ்சலி

எமது ஊரின் கல்வித்துறை முன்னோடிகளில் ஒருவரும்
யாழ்ப்பாண வலய பிரதிக் கல்விப் பணிப்பாளருமாகிய
த.இரசலிங்கம் அவர்களின் அன்புத்தாய்

**திருமதி தம்பையா சிவக்கொழுந்து**

அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் அன்னாரது
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

(70282) அரியாலையூர் மக்கள்

## நிகழ்வுகள்

யாழப்பாணம், ஜன.20

பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலையின் கொடிநாள் அங்குரார்ப்பண நிகழ்வு நாளை திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் திருமதி கி.சிவராஜா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் ஓய்வுபெற்ற அதிபர் க.அழகரத்தினம் கொடியினை வெளியிட்டு வைக்க பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் க.பத்மநாதன் பெற்றுக் கொள்வார். (202)

* * *

யாழ்ப்பாணம், ஜன.20

யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கத்தின் பொதுக்கூட்டம் இனறு ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கோண்டாவில் ஸ்ரீ நாராயண சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

(202-224-86)

* * *

யாழ்ப்பாணம், ஜன.20

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் வலிகாமம பிரதேசத்தில் நடத்தும் பொங்கல் விழா இன்று ஞாயிற்றக்கிழமை காலை 8.30 மணிக்கு நீர்வேலி ஸ்ரீ கணேசா அறநெறிப் பாடசாலை யில் நடைபெறவுள்ளது.

இந்துசமய கலாசார அபிவிருத்தி உதவியாளர் த.பிரதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ.பல்கலைக் கழக இந்து நாகரீகத்துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் ப.கணேசலிங்கம் கலந்து கொள்வார். (202)

* * *

வலி.தென்மேற்கு, ஜன.20

பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியல் கல்வியமைச்சின் SEMP திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட புதிய நூலக கட்டடத்தின் திறப்பு விழா எதிர்வரும் செவ்வாய்க்கிழமை முற்பகல் 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் பு.ஸ்ரீ விக்கினேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலய கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் கலந்து கொண்டு நூலகத்தை சம்பிரதாய முறைப்படி திறந்து வைப்பார்.

(202-135)

* * *

யாழ்ப்பாணம், ஜன.20

யாழ்.மாவட்டத்தில் ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் போரூட் நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்ட திட்டங்களின் கையளிப்பு நிகழ்வு இன்று ஞாயிறறுக்கிழமை காலை 9 மணி முதல் நடைபெறவுள்ளது.

திக்கத்தில் அமைக்கப்பட்டுள்ள சுகாதார நிலையம், தும்பளை கிழக்கில் அமைக்கப்பட்ட முன்பள்ளி வீதி, பொலிகண்டி கிழக்கு கக்கோட்டை ஆகிய இடங்களில் அமைக்கப்பட்ட வடிகால்கள் ஆகியனவே கையளிக்கப்படவுள்ளன. (202)

## இன்றைய மாணவர் ...

(07 பக்கத் தொடர்ச்சி)

வினா:- தற்போது நவீன மெழியியற் கண்ணோட்டத்தில் தமிழ் இலக்கணம் தொடர் பான பல நூல் கள் வெளிவருகின்றன. இவை பற்றி உங்கள் கருத்து?

விடை:- போதிய இலக்கண அறிவு பெறாதவர்கள் எழுதும் இத்தகைய நூல்களிற் பிழைகள் பல காணப்படுகின்றன. அண் மையில் தமிழ் இலக்கணத்தின் அடிப்படைகளைச் சொல்லும் நூலொன்றை ஒருவர் தந்து வாசிக்கச் சொன்னார். இரண்டு பக்கங்களைப் படித்தவுடனேயே 'இது எனது தமிழறிவையும் பழுதாக்கிவிடும்' என்று சொல்லித் திருப்பிக் கொடுத்து விட்டேன்.

### தற்காலமாணவர்க்கு...

வினா:- செவ்வியில் நிறைவாக தற்போது தமிழ் கற்றுக் கொண்டிருக்கும் மாணவருக்கு நீங்கள் சொல்ல விரும்பும் செய்தி என்ன?

விடை:- நாங்கள் படிக்கும் காலத்தில் பாடத்தை முழுமையான அறிவு பெறுவதீற்காகப் படித்து விட்டு வந்த வினாக்களுக்கு விடை யளித்தோம். இப்போதோ வினாக்களை எதிர் பார்த்து அவற்றுக் காகப் படிக்கிறார்கள். இந்த நிலை மாறவேண்டும். மாணவர்கள் அறிவுத் தாகத்தோடு நன்றாக வாசிப்ப தன் மூலமே தமிழறிவை விருத்திசெய்ய முடியும். ★

கணனித் தட்டச்சாளர்
(பயிலுநர்)

ஜி.சீ.ஈ.உயர்தரப் பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தியடைந்தவர்கள் கணனித் தட்டச்சாளர் பயிலுநர்களாக இணைத்துக்கொள்ளப்படுவர். பக்க வடிவமைப்பு, போட்டோஷொப் அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படும். பயிற்சிக் காலத்தின்போது (3 மாதங்கள்) தகுந்த அலவன்ஸ் வழங்கப்படும்.

இல: 3049,
[illegible]
(அ/551137)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை
செல்வி மு. குமுதினி அவர்களின் அன்புத் தாய்

**திருமதி திருவருட்சக்தி முத்துக்குமாரசாமி**

அவர்கள் காலமானதையிட்டு ஆறாத் துயரில் ஆழ்ந்திருக்கும்
அவரது குடும்பத்துக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன்
அவரது ஆத்மா சாந்திக்காகவும் பிரார்த்தித்துக் கொள்கிறோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்
கல்விசாரா ஊழியர்கள்,
யா/கைதடி விக்னேஸ்வர வித்தியாலயம். (70278)

## மரண அறிவித்தல்

### கந்தசாமி மிதுனேஸ்வரி

நவாலி தெற்கை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி மிதுனேஸ்வரி நேற்று 19.01.2008 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவசம்பு - செல்லம்மா தம்பதியரின் புதல்வியும் காலஞ்சென்ற இராசதுரையின் சகோதரியும் காலஞ்சென்ற கந்தசாமியின் மனைவியும், கந்தவனம் தவமணிதேவி, ஸ்ரீதரன் (பிரான்ஸ்) ஆகியோரின் தாயும் கந்தவனம் (கவிபோட்டோ - இணுவில்) ரஞ்சினி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியும் சுதனன் அனுசன் (பிரான்ஸ்) காலஞ்சென்ற தர்சிகா மற்றும் காயத்திரி, தனுஸ் (பிரான்ஸ்) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.01.2008) ஞாயிற்றுக்கிழமை மு.ப 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக நவாலி ஊரியோடை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ந.கந்தவனம்
(மருமகன்)

நவாலி தெற்கு,
முதலிய கோயிலடி. (70281)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# பிரிட்டிஷ் அமைச்சரின் கருத்து; எழுந்துள்ள மூன்று கேள்விகள்

இலங்கையில் புதிய போர் நிறுத்த ஒப்பந்தத்தை உருவாக்குவதற்கு சர்வதேச சமூகம் முயல வேண்டும். பிரிட்டனின் பொதுநலவாய வெளிவிவகார அமைச்சர் கிம் ஹவுல்ஸ் இந்தக் கருத்தை (கோரிக்கையை என்றும் கொள்ளலாம்) பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் முன்வைத்திருக்கின்றார்.

நோர்வேயின் அனுசரணையின் கீழ் அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கும் இடையில் ஆறு வருடங்களுக்கு முன்னர் செய்யப்பட்ட ஒப்பந்தம் அரசாங்கத்தினால் முறிக்கப்பட்டுவிட்டது.

அந்த ஒப்பந்தத்திலிருந்து விலகிக் கொள்வதற்கு அரசு ஆலோசிக்கத் தொடங்கிய காலத்திலேயே, அதனைத் தொடர்ந்து வேகம் கொள்ளத்தக்க பெரும் போர் குறித்தும், அதனால் உண்டாகக் கூடிய மனிதப் பேரவலங்கள் குறித்தும் சர்வதேசங்கள் உட்பட பல தரப்புகளும் எச்சரித்திருந்தன.

ஆனால் அவை யாவும், செவிடன் காதில் ஊதிய சங்கொலியாயிற்று. தனது படைப்பலம் கொண்டு தமிழர்களை ஒழித்து, அடக்கி ஒடுக்கி, உப்புச் சப்பற்ற கீழ் மட்ட அரசியல் தீர்வு ஒன்றை உயர்த்திக் காட்டி அவர்களைத் தன் காலடியில் விழச் செய்து அடிமைகளாக்க வேண்டும் என்ற பேரினவாதப் பேராண்மை வாத அத்திவாரத்திலேயே அரசு எழுந்து நிற்கின்றது.

அதனால், இந்தியா உட்பட சர்வதேசம் என்ன, எங்கிருந்து கோரிக்கை அல்லது வேண்டுதல் - அழுத்தம் - வந்தாலும் அதனைப் புறக்கணித்துத் தள்ளி, நினைத்ததைச் செய்யும் - எவரையும் பொருட்படுத்தாத- போக்கை அரசு கையில் எடுத்தது.

மொத்தத்தில் தான் நினைத்ததைச் செய்வதைத் தடுப்போரும் இல்லை, எவருக்கும் செவிசாய்க்கப் போவதுமில்லை என்ற ஆணவப் போக்குடனேயே அரசு போர் நிறுத்த ஒப்பந்தத்தை முறித்துக் கொண்டது.

அதுமட்டுமல்ல. போர் நிறுத்தத்தைத் தான் முறித்துக் கொண்ட பின்னர், இப்பத்தியில் நேற்றுக் குறிப்பிட்டதுபோல, சர்வதேச சமூகம் சற்று அடக்கி வாசித்ததை - அவற்றின் மெத்தனப் போக்கை - தனது செயலுக்குக் கிடைத்த அங்கீகாரமாகவும் - ஆதரவாகவும்- அர்த்தப்படுத்திக் கொண்டிருக்கின்றது இலங்கை அரசு.

பூனை கண்ணை மூடிக் கொண்டால் பூலோகமே இருண்டுவிட்டதாக நினைத்துக் கொள்வதாக ஒரு முதுமொழி. அந்த நிலையில் நின்று தன்னைத் தட்டிக் கேட்க எவரும் இல்லை என்ற அகங்காரத்தில் திளைத்திருக்கிறது மஹிந்த அரசு.

அதன் வெளிப்பாடே, நாம் இப்பத்தியில் நேற்று எடுத்துக் காட்டிய ஊடகத்துறை அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பாவின் விளங்காத் தன்மை கொண்ட கூற்று.

அமைச்சர் கொழும்பில் கருத்து வெளியிட்ட அதே நாளில், பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் கிம் ஹவுல்ஸ் தமது நாட்டு நாடாளுமன்றத்தில் அதற்கு நேர் மாறான கருத்தை வெளியிட்டிருக்கின்றார்.

அவர், புதிய போர் நிறுத்தம் ஒன்றை உருவாக்குமாறு சர்வதேசத்துக்கு அழைப்பு விடுத்திருப்பது, இலங்கை நடந்துகொண்ட - செயற்பட்ட - விதம் குறித்து சர்வதேசம் அதிருப்தி அடைந்துள்ளது என்பதனையே வெளிப்படுத்துகின்றது. ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம். பிரிட்டிஷ் அமைச்சரின் கருத்தை அவ்வாறு கொள்வது பொருத்தமானதே.

சிங்களப் பேரினவாத, இனவாதக் கடுங்கோட்பாட்டாளர்களின் வலையில் சிக்கி, அவர்கள் சுழற்றும் நூலில் ஆடும் பொம்மையாகத் தவிக்கும் அரசின் கோலம் பரிதாபத்துக்குரியது என்று சொல்வதற்கில்லை. ஏனெனில் அதுவும் தமிழினத்தை ஒடுக்கவேண்டும் என்ற பேரினவாதம் என்ற ஒரே குட்டையில் ஊறிய மட்டையே.

ஆகையால் பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சரின் கருதது மஹிந்த அரசின் சபையில் ஒரு போதும் ஏறாது என்பதில் எவரும் ஐயம் கொள்ள இடமில்லை.

எனினும் -

பிரிட்டிஷ் அமைச்சரின் கருத்து - சர்வதேசத்துக்குரிய அழைப்பு - வெளி உலகின் கண்களைத் திறப்பதற்கு ஓர் எடுகோள் - ஒரு சிறிய தொடுகை - எனக் கொள்ளலாம். பிரிட்டிஷ் அமைச்சர் சொல்லில் கூறியதை அவரும் அவரது அரசும் முன்னெடுக்க மனதாரச் செயற்பட்டால், இலங்கை அரசுக்குச் சர்வதேச அழுத்தத்தைக் கொடுக்கலாம் என்பதனை நிராகரிக்கவும் முடியாது.

மனித உரிமை மீறல்களைக் கட்டுப்படுத்த முடியாத இலங்கை என்ற கறுப்பு முத்திரை மட்டுமன்றி மற்றும் பல துறைகளிலும் பல விதங்களிலும் சர்வதேச மட்டத்தில் தான் தாழ்ந்து போய்க் கிடப்பதை அரசு பூசி மெழுக முயற்சிக்கலாம். ஆனால் முந்திய நாள்கள் போன்று அது இலகுவானதன்று.

இலங்கையில் தொடர்ந்து கொண்டிருக்கும் மனிதப் பேரழிவையும் போரழிவையும் தடுக்க வேண்டும் என்று சர்வதேச சமூகம் அக்கறையுடன் செயற்படுமானால் -

அரசாங்கத்துக்கு அரசாங்கம் நல்லுறவு - ஒத்துழைப்பு - என்ற ராஜீக விதிகளையும் - தமது சொந்த வர்த்தக மற்றும் பூகோள அரசியல் நலன்களையும் - முன்னிறுத்தாமல் அர்ப்பணிப்புடன் செயற்பட்டால் - இலங்கைத் தீவில் ஒரு உகந்த தீர்வைக் கொண்டு வரு வதற்கு சர்வதேச சமூகம் உதவமுடியும்.

ஆனால் அது நடைமுறைச் சாத்தியமானதா, இலகுவானதா, குறுகிய காலத்தில் கைக்கு வரக்கூடியதா என்பதே எழுந்து நிற்கும் முக்கிய மூன்று வினாக்கள்!

# வன்னி மீதான படை நடவடிக்கைகள் எக்காரணம் கொண்டும் கைவிடப்படா

## இராணுவத் தளபதி சொல்கிறார்

கொழும்பு,ஜன.20

விடுதலைப் புலிகள் தென்னிலங்கையில் மிலேச்சத்தனமான நடவடிக்கைகளில் ஈடுபட்டாலும் வன்னி மீதான படை நடவடிக்கை கைவிடப்படமாட்டாது என்று தெரிவித்திருக்கும் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா, வன்னியை விரைவில் மீட்டே தீருவோம் என்றும் சூளுரைத்துள்ளார்.

தென்பகுதியில் நடைபெறும் படுகொலைச் சம்பவங்கள் தொடர்பாக ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்திருக்கிறார்.

அவர் தெரிவித்துள்ளவை வருமாறு-

வடக்கில் வன்னிப் பகுதியில் உள்ள மக்களைப் பயங்கரவாதிகளின் பிடியில் இருந்து விடுவிக்கும் இராணுவ நடவடிக்கைகள் தொடர்ந்து வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

வடபகுதியில் பாதுகாப்புப் படையினர் இதுவரை மேற்கொண்ட இராணுவ நடவடிக்கையின்போது புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த சில முக்கிய இடங்கள் அரச கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டிருக்கின்றன.

வடக்குப்போர் முனையில் புலிகளுக்கு ஏற்படும் பின்னடைவுகளை சமாளிப்பதற்கு அந்த இயக்கம் தென்பகுதி மக்களைப் படுகொலை செய்து வருகின்றது.

மிகவும் வெற்றிகரமாக இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டுவரும் படையினரின் செயற்பாடுகளை மட்டுப்படுத்தும் நோக்கில் புலிகள் இவ்வாறான மிலேச்சத்தனமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

எவ்வாறாக இருந்தாலும் வன்னிப் பகுதி மீது அரச படைகள் மேற்கொள்ளும் மனிதாபிமான இராணுவ நடவடிக்கைகள் கைவிடப்படமாட்டாது. பயங்கரவாதிகளின் எந்த அச்சுறுத்தல்களுக்கும் இராணுவம் அடிபணியவும் மாட்டாது - என்று தெரிவித்துள்ளார். (சி)



# மனிதாபிமானப் பணிகளுக்காக அமெரிக்கா பெருமளவு நிதியுதவி

கொழும்பு, ஜன 19

இலங்கையின் மனிதாபிமானப் பணிகளுக்கு அமெரிக்கா கடந்த வருடம் 2 கோடியே 60 லட்சம் அமெரிக்க டொலர்களை வழங்கியுள்ளது.

உள்நாட்டில் இடம்பெயர்ந்து வாழ்வோரின் பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகவே இந்த நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் றொபேட் ஓ பிளேக் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கத் தூதரகத்தின் செய்திக் குறிப்பிலேயே இதுபற்றித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு-

இலங்கையில் மீண்டும் மூண்டுள்ள மோதல்கள் காரணமாக 3 லட்சம் பேருக்கும் அதிகமானவர்கள் மீளக் குடியமர்த்தப்பட்டுள்ள போதிலும் இவர்களின் தொழில் நடவடிக்கைகளுக்கு உதவ வேண்டி உள்ளது. இதன் நிமித்தம் அமெரிக்கா இந்த நிதியுதவியை யு.எஸ்.எயிட் அமைப்பினூடாகவும் செஞ்சிலுவைச் சங்கத்தினூடாகவும் வழங்கியுள்ளது - என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

# விளையாட்டு நிகழ்வு

தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழகம் வலிகாமம், யாழ்ப்பாணம் உதைபந்தாட்ட லீக்குகளின் அனுசரணையுடன் நடத்திவரும் 7பேர் பங்கு பற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் நாளை பிற்பகல் 3.30 மணிக்கு நவாலி அட்டகிரி விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் கலந்துகொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:

* சண்டிலிப்பாய் கல்வளை விநாயகர் விளையாட்டுக் கழகம் எதிர் அராலி துணைவி சென்டார் விளையாட்டுக் கழகம்.
* அராலி தெற்கு மாவத்தை விளையாட்டுக் கழகம் எதிர் யாழ்ப்பாணம் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக பி அணி.
* அராலி திருமகள் விளையாட்டுக் கழகம் எதிர் தெல்லிப்பளை யுத்யூனியன் விளையாட்டுக்கழக ஏ அணி.

(202-86)

# பட்டங்கள் ஏற்றுவதால் மின்தடைப்படுகிறது; அவதானமாகச் செயற்படுமாறு அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஜன.20

பட்டங்கள் ஏற்றும்போது அவை பிரதான உயர் அழுத்த மின் மார்க்கத்தில் சிக்கி மின் விநியோகத்தைத் தடை செய்கின்றன. எனவே பொதுமக்கள் அவதானமாகச் செயற்படவேண்டும். என யாழ்.பிரதேச மின் பொறியியலாளர் கேட்டுள்ளார்.

பட்டம் ஏற்றும் காலம் ஆரம்பித்துள்ளதால் பிரதான உயர் அழுத்த மின் மார்க்கத்தில் பட்டங்கள் சிக்கிக் கொள்கின்றன. அவற்றால் மின் விநியோகம் அடிக்கடி தடைப்படுகின்றது.

குறிப்பாக மயிலங்காடு, சுன்னாகம், பருத்தித்துறை, வியாபாரிமூலை, பொலிகண்டி, கலிகை, யாக்கரை, கல்லூரி வீதி ஆகிய பகுதிகளில் இவ்வாறு அடிக்கடி கூடுதலாக இடம்பெறுகின்றது.

எனவே மின் மார்க்கங்களுக்கு இடையூறு விளைவிக்காத வண்ணம் பொதுமக்கள் நடந்துகொள்ளவேண்டும் என்றும் மின் பொறியியலாளர் மேலும் கேட்டுள்ளார்.

(202-155)




வலி.வடக்கு, ஜன.20

மல்லாகம் தெல்லியம்பந்தை ஞான வைரவர் சுவாமி கோயில் அலங்காரத் திருவிழாவின் இறுதி நாள் நிகழ்வுகள் நாளைமறுதினம் செவ்வாய்க் கிழமை இடம்பெறவுள்ளது.

மகா சங்காபிசேகம் நடைபெற்று தொடர்ந்து மகேஸ்வர பூசை இடம் பெறும். (202-86)

* * *

யாழ்ப்பாணம்,ஜன.20

நயினாதீவு நாகபூஷணி அம்மன் கோயிலில் தைப்பூசத் திருநாள் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. விசேட அபிஷேகங்கள், பூசைகளைத் தொடர்ந்து அம்பாள் வீதி உலா வருவார்.

ஏடு தொடக்குதல், நேர்த்திகளுக்கு விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (202)

* * *

வலி.தென்மேற்கு,ஜன.20

மாதகல் புனித செபஸ்தியார் ஆலய திருவிழாத் திருப்பலி இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 7 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ்.மறைமாவட்ட ஆயர் அதி.வண. தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் திருப்பலி பூசையும் அதனை அடுத்து திருச்சொரூப பவனியும் இடம்பெறவுள்ளன. (202-135)

* * *

யாழ்ப்பாணம்,ஜன.20

ஓட்டுமடம் புனித செபஸ்திரியார் ஆலயத்தின் திருவிழாத் திருப்பலி இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு பங்குத்தந்தை தலைமையில் நடைபெறவுள்ளது. (202)

* * *

யாழ்ப்பாணம்,ஜன.20

கோண்டாவில் கிழக்கு சிவமகாகாளியம்பாள் ஆலயத்தின் சங்காபிஷேகம் இன்று காலை 8 மணிக்கு ஆரம்பமாகின்றது.

காளியம்பாளுக்கு 1008 சங்காபிஷேகமும் காசி ஈஸ்வருக்கு 108 சங்காபிஷேகமும் நடைபெற்று தொடர்ந்து விசேட பூசை, வீதியுலா என்பனவும் இடம் பெறும். நாளை முற்பகல் 10 மணிக்கு கும்பாபிஷேகமும் நடைபெறும். (202)

## நாளை

| | |
|---|---|
| தை - 7 | திங்கட்கிழமை 21.01.2008 |
| நட்சத்திரம் : | திருவாதிரை பிற்பகல் : 01.05 |
| திதி : சதுர்த்தசி முன்னிரவு : 09.37 | |
| சுபநேரம் : | 12.35 - 02.05 |
| ராகுகாலம் : | 08.05 - 09.35 |

# வாழ்க்கையின் அடிப்படையே வேற்றுமைதான்..... அதற்காக நாம் சண்டையிடத் தேவையில்லை.....

## சுவாமி விவேகானந்தர் யாழ்ப்பாணத்தில் கூறிய சொற்கள்

ஜனவரி 24 சுவாமி விவேகானந்தரின் பாதங்கள் யாழ்.மண்ணில் பதிந்த தினம்.



சிக்காகோ நகரில் நடைபெற்ற சர்வமத மாநாட்டில் கலந்து கொண்டு, இந்து மதத்தின் பெருமையை உலகறியச் செய்தபின் தாயகம் திரும்புகையில் இலங்கை வாழ் இந்துக்களின் அழைப்பையேற்று இலங்கைக்கு விஜயம் செய்தார் சுவாமி விவேகானந்தர்.

இலங்கைக்கு வருகை தந்த சுவாமி விவேகானந்தரை யாழ்ப்பாணத்திற்கும் விஜயம் செய்யுமாறு யாழ்ப்பாண இந்துக்கள் விடுத்த கோரிக்கையை ஏற்று யாழ்ப்பாணம் வந்தார் சுவாமிகள். வரும் வழியில் அநுராதபுதத்தில் அநகாரிகதர்மபால வின் ஆதரவாளர்கள் குழப்பம் விளைவிக்க முயன்றனர். இதனையறிந்த சுவாமி, அநுராதபுரத்தில் வைத்து புத்த பெருமானின் பெருமைகளைப் பற்றிப்பேசினார். ஆனால் அங்கு குழப்பம் விளைவிக்க முயன்ற சிங்களவர்கள் அமைதியடைந்தனர்.

1897 ஆம் ஆண்டு ஜனவரி 24 ஆம் திகதி வெண்புரவிகள் பூட்டிய வண்டியில் யாழ்ப்பாணம் வந்தார் சுவாமி. யாழ்ப்பாணத்தில் விவேகானந்தருக்கு மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது. வரவேற்புரையிலிருந்து சில வரிகள்:

**இன்றும் நினைவில் கொள்ள..... அன்றைய ஞாபகம் .... இங்கே!**

இலங்கையில் இந்துக்கள் அதிகமாக வாழும் பகுதி யாழ்ப்பாணம். போர்த்துக் கீசரும் டச்சுக்காரரும் மதம் மாறுமாறு நிர்ப்பந்தித்த போதும் மதம் மாறாமல் தமது மதத்தில் உறுதியாக ஊன்றி நின்ற எம் முன்னோர்கள் உய ரிய இந்து கலாசாரப் பண்புகளை எமக்கு அளித்துச்சென்றுள்ளனர். யாழ்ப்பாண இந்துக்களாகிய நாம் தங்களை உளங்கனிந்த உவகையுடன் வரவேற்கிறோம்.

ஜனவரி 25 ஆம் திகதி வேதாந்தம் என்ற தலைப்பில் யாழ். இந்துக் கல்லூரியில் சொற்பொழிவாற்றினார் சுவாமி.

விவேகானந்தரின் சொற்பொழிவிலிருந்து சில வரிகள்:- ''உலகிலுள்ள ஒவ்வொருவரும் ஒரே சமயத்தை ஏற்றுக்கொண்டு ஒரேவழியைப் பின்பற்றினால் உலகம் முழுவதிற்கும் துன்பமே வந்து சேரும். வாழ்க்கையின் அடிப்படையே வேற்றுமைதான். வேற்றுமைகளுக்காக நாம் சண்டையிடத் தேவையில்லை. வெளிநாட்டிலிருந்து சிலர் வந்து இது ஒன்றுதான் வழி இதையே எல்லோரும் பின்பற்ற வேண்டும் எனக் கூறுகின்றனர். இவர்களைப் பார்க்கச் சிரிப்புத்தான் வருகிறது. உங்களுடைய வழி உங்களுக்கு நன்றாக இருக்கலாம். ஆனால், எனக்கு நன்றாக இருக்காது''

- தாண்டவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13ஆவது திருத்தத்துக்கு உட்பட்ட தீர்வுத் திட்டம் தமிழ்மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றாது



கிளிநொச்சி,ஜன.20

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்துக்கு உட்பட்ட தீர்வு என்பது தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை முற்று முழுதாக நிறைவுசெய்யக்கூடிய வகையில் இருககாது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

சர்வதேச ஊடகம் ஒன்றுக்கு அளித்த செவ்வியில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தவையாவன:-

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் இன்னும் சரியான வழிக்கு வரவில்லை. 13 ஆவது திருத்தத்தின் அடிப்படையிலான தீர்வு விடயத்திலேனும் ஒரு சுமுகமான முடிவை எடுப்பதற்குக் கூட அனைத்துக் கட்சிகளிடமும் ஒருமித்த கருத்து ஏற்படவில்லை. முரண்பாடுகளே ஏராளம் இருக்கின்றன.

கிழக்கில் தமிழ்மக்கள் மட்டுமல்ல முஸ்லிம் மக்களும் அச்சுறுத்தல்களுக்கு உட்பட்டு வருகின்றனர். இந்த நிலையில் அங்கு உள்ளூராட்சித் தேர்தல் என்பது ஒரு நாடகமேயாகும். இராணுவத்தை வைத்துக் கொண்டு நடத்தப்படும் தேர்தல் நாடகமே தவிர வேறு ஒன்றுமல்ல.

எமது மக்கள் மீது பாரிய இராணுவ நடவடிக்கையை அரசு மேற்கொண்டால் அதனை முறியடித்து தகுந்த பாடத்தைப் புகட்டுவோம். அதற்கான பலமான நிலையில் நாங்கள் இருக்கின்றோம் - என்றார் அவர். (அ-1)

## காத்தான்குடி - ஆரையம்பதி பிரதேசத்தில் இயல்புநிலையை தோற்றுவிக்க இணக்கம்

மட்டக்களப்பு,ஜன.20

மட்டக்களப்பில் கடந்த சில நாள்களாக நிலவி வரும் வன்முறைச் சூழலை தவிர்த்து அங்கு இயல்பு நிலையை ஏற்படுத்துவது என்று அப்பிரதேச தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்களின் பிரதிநிதிகள் ஒன்றிணைந்து தீர்மானித்துள்ளனர்.

காத்தான்குடி, ஆரையம்பதி பகுதிகளில் இடம்பெற்ற சில வன்செயல்களால் தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்களிடையே ஏற்பட்டிருந்த கசப்புணர்வை போக்கும் நோக்கில் மட்டக்களப்பு பொலிஸ் தலைமையகத்தில் நேற்று சனிக்கிழமை கூட்டம் ஒன்று நடைபெற்றது. அக்கூட்டத்திலேயே மேற்படி முடிவு எடுக்கப்பட்டது.

கடந்த சில நாள்களுக்கு முன்னர் காத்தான்குடி பள்ளிவாசல் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இமாம் ஒருவர் உட்பட மூன்று முஸ்லிம்கள் காயமடைந்தனர். மற்றும் செல்வநகர் நாசசிமார் ஆலயம் விஷமிகள் சிலரால் களங்கப்படுத்தப்பட்டமை உட்பட சில சம்பவங்களை அடுத்து அப்பிரதேசத்தில் அமைதியற்ற சூழ்நிலை உருவானது.

குறிப்பிட்ட பகுதியில் அமைதி நிலைமையை ஏற்படுத்துவதற்காக அப்பகுதி பிரதிப் பொலிஸ்மா அதிபர் வசந்த நாணயக்கார தலைமையில் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கருணா குழுவினரும் கலந்து கொண்டிருந்தனர்.

இக்கூட்டத்தில் கலந்துகொண்டிருந்த முன்னாள் பிரதி அமைச்சரும் முஸ்லிம் காங்கிரஸ் பிரமுகருமாகிய எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லா கூறுகையில் ''காத்தான்குடிக்கும் ஆரையம்பதிக்கும் இடையில் தொடர்ச்சியாக இருந்து வருகின்ற பிரதேச சபைகளுக்கு இடையிலான எல்லைப்பிரச்சினையை வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டிருக்கும் அடிப்படையில் தீர்ப்பதற்கான வழிமுறைகள் தொடர்பில் இணக்கம் காணப்பட்டடுள்ளது''-என்றார். (அ-2)

## சாதனை கனவைத் தகர்த்து வரலாறு பதித்தது இந்தியா

போர்த்,ஜன.20

ஆஸ்திரேலியாவுக்கு எதிராக பேர்த்தில் நடைபெற்றுவந்த 3ஆவது டெஸ்ட் போட்டியில் இந்திய அணி 72 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றியைப் பதிவுசெய்தது. இதன்மூலம் டெஸ்ட் அரங்கில் தொடர்ச்சியான 17ஆவது வெற்றியைப் பெற்று உலகசாதனை படைக்கலாம் என்ற ஆஸியின் கனவுக்கு முற்றுப் புள்ளி வைத்தது கும்ளேயின் இந்திய அணி.

வெற்றிபெற 413 ஓட்டங்கள் தேவை யென்ற நிலையில் 2ஆவது இன்னிங்ஸை ஆடிய ஆஸ்திரேலிய அணி 4ஆவது நாளான நேற்று தேநீர் இடைவேளைக்குச் சற்றுப் பின்னர் 340 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுகளையும் இழந்து தோல்வியடைந்தது. (சி)

## மொனறாகலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இத்தேடுதலின் போது கிளைமோர் குண்டு ஒன்றும் பிஸ்டல் ஒன்றும் மீட்கப் பட்டுள்ளன என்றும் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

அதேவேளை, அந்தப் பகுதியில் இடம்பெற்ற தாக்குதல்கள் தொடர்பாக ஐந்து பொதுமக்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்தது. (அ-1)

## அதிகாரப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்ற அங்கீகாரம் கிடைத்த அதிகாரப் பகிர்வு யோசனையை நடைமுறைப்படுத்துவதில் எனது அரசு மிகவும் உறுதியாக உள்ளது. அனைத்துக் கட்சிக் குழுவின் இத்தீர்வுப் பொதி இடைக்கால ஏற்பாடாக இருந்தாலும் அது விரைவில் இறுதி செய்யப்படும்-என்றார். (அ-2)

## துளியேனும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு மாகாண சபை, கிழக்கு மாகாண சபை ஆகியன தனித்தனியாக இயங்கும் என்றும் அதற்கேற்ற விதத்தில் நிர்வாக விதிகளில் கொண்டுவரப்பட வேண்டிய சில மாற்றங்கள் குறித்தும் அ.க. குழு யோசனையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாகவும் அறியவருகிறது.

மொத்தத்தில் எவ்வித சத்துமில்லாத வெறும் சக்கை மட்டுமே தீர்வு யோசனையாக முன்வைக்கப்பட உள்ளதாகவும் அவ் வட்டாரங்கள் வர்ணித்தன.

இப்போதுள்ள அரசியல் சூழ்நிலையில் இதனைவிட முன்னேற்றகரமாக எதுவும் செய்யமுடியாத நிலையில் தாம் உள்ளதாக அனைத்துக் கட்சிக்குழுவின் பிரமுகர் ஒருவர் கவலை தெரிவித்தார் என்றும் அறியவந்தது. (அ)

## 15 சுயேச்சை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதுவரை 12 குழுக்கள் கட்டுப்பணத்தைச் செலுத்தியுள்ளன.

எனினும் எந்தவொரு கட்சியும் அங்கு வேட்பு மனுக்களை இதுவரை தாக்கல் செய்யவில்லை.

வேட்புமனுக்களைத் தாக்கல் செய்வதற்கான இறுதித் தினம் இம்மாதம் 25ஆம் திகதியாகும்.

கிழக்கு உள்ளூராட்சித் தேர்தலில் ஈ.பி.டி.பி., ஈ.பி.ஆர்.எல்.எவ்.(வரதர் அணி) மற்றும் புளொட் ஆகிய கட்சிகள் இணைந்து கூட்டாகப் போட்டியிடத் திட்டமிட்டுள்ளன. தமிழ்மக்கள் விடுதலைப் புலிகள் தனித்துப் போட்டியிடப் போவதாக அறிவித்துள்ளது. (அ-2)

## லொட்ஜிலிருந்து கைதான இளைஞர் விடுவிக்கப்பட்டார்

கொழும்பு,ஜன.20

வெள்ளைவானில் வந்தோரால் ஆமர் வீதி லொட்ஜிலிருந்து கடந்த வியாழக்கிழமை கடத்திச் செல்லப்பட்ட யாழ்ப்பாணம், உரும்பிராயைச் சேர்ந்த இளைஞர் நேற்று விடுவிக்கப்பட்டார்.

இராணுவ சீருடை தரித்த நால்வரும் சிவில் உடையில் வந்த இருவரும் உரும்பிராயைச் சேர்ந்த சிவலிங்கம் ராஜ்குமார் (வயது 25) என்ற இளைஞனை விசாரணை செய்வதற்காக எனக் கூறி அழைத்துச்சென்றிருந்தனர்.

இந்நிலையில் பிரஸ்தாப இளைஞன் கடும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர்நேற்று விடுவிக்கப்பட்டுள்ளார் என்று பிரதி அமைச்சர் பி.இராதாகிருஷ்ணன் விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

## 23ஆம் திகதியின்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடைமுறைப்படுத்தும் போது எதிர் நோக்கும் பிரச்சினைகள் இனங்காணப்பட்டு அவை குறித்து தெரிவுக்குழு அமர்வுகளை நடத்திஆராயும்.

தற்போதைய அரசமைப்புக்கு உட்பட்டதாக அந்த விடயத்தை நடைமுறைப் படுத்தலாமா அல்லது அரசமைப்பில் திருத்தம் கொண்டுவரப்பட வேண்டுமா என்பது குறித்தும் தெரிவுக்குழு தொடர்ந்து ஆராயும் என்றும் அமைச்சர் சொன்னார்.

## இராணுவத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜெயவர்த்தன வரவேற்றார். அங்குள்ள இராணுவ உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடிய இராணுவத் தளபதி அந்தப் பகுதிகளில் உள்ள மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான அனைத்து நடவடிககைகளையும் மேற்கொள்ளுமாறு ஆலோசனை வழங்கினார். (அ)

சுடர் ஒளி
THE SUDAR OLI
ஜன. 06 - 12 2008
பல அரசியல் கட்டுரைகளுடனும் வழமையான சுவையான அம்சங்களுடனும் இன்று விற்பனையில் உள்ளது.
உங்கள் உதயன் விநியோகஸ்தர்களிடம் கேட்டுவாங்குங்கள்!

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சரஸ்வதி வடிவேலு

மீசாலை வடக்கு, வேம்பிராயைச் சேர்ந்த திருமதி சரஸ்வதி வடிவேலு நேற்று (19.01.2008) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் நாகலிங்கம் வடிவேலுவின் அன்பு மனைவியும் திருமதி கோகிலவாணி (அதிபர், யா/மீசாலை கமலாம்பிகை வித்தியாலயம்), யோகேஸ்வரன்(சுவிஸ்), ரவிச்சந்திரன் (பிரான்ஸ்), சிறிதரன் (ஜேர்மனி),உமாபதிசிவம் (சுவிஸ்), அமரர் ஆனந்தசிவம் ஆகியோரின் அன்புத்தாயாரும் சாந்தினி, இன்பேஸ்வரி, உதயா, வதனா, சுவேந்திரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரிகைகள் இன்று (20.01.2008) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மீசாலை வடக்கிலுள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நா.வடிவேலு
(கணவர்)

'தயா பவனம்',
மீசாலை வடக்கு, வேம்பிராய்.

### தசாவதானம் ஞானசேகரம்

தாவளை, இயற்றாலை, கொடிகாமத்தைச் சேர்ந்த தசாவதானம் ஞானசேகரம் நேற்று (19.01.2008) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் ராசமணியின் அன்புக் கணவரும் செல்வநாயகம் (ஆசிரியர், நாவற்குழி ம.வி.), கலாவதி, மகேஸ்வரன், கணேசலிங்கம்(ஜனசக்தி காப்புறுதி), கலைச்செல்வி(ஆசிரியை, விக்னேஸ்வாரா ம.வி), ஞானசந்திரன், வளர்மதி (ஆசிரியை, இயற்றாலை ம.வி.) ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(20.01.2008) பிற்பகல் 2 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று இயற்றாலை குடியிருப்பு மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கணேசலிங்கம்
(மகன்)

தாவளை, இயற்றாலை,
கொடிகாமம்.

SUBRA (14)
சித்தன்கேணி
" யாழ் ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த சேவையில்"
★ தைப்பூச நன்நாளில் பின்வரும் வகுப்புகள் ஆரம்பம்
★ G.A.Q 1st in Com, A.A.T Computer
நேரம் காலை 11.30 (சுபநேரத்தில்)
★ சைவப்புலவர், இளஞ் சைவப்புலவர் பரீட்சைக்களுக்கான வழிகாட்டல் வகுப்புக்கள் புதிய பிரிவு
நேரம் காலை 11.30
★ தரம் 3 முதல்11வரையான தமிழ் - ஆங்கில மொழி மூல வகுப்புக்கள்புதியபிரிவு
★ தரம் 5 புலமைப்பரிசில் மாணவர்களுக்கான மாபெரும் கருத்தரங்கு
நேரம் காலை 7.00
பதிவுகள் யாவும் எம்மால் மேற்கொள்ளப்படும். மேலதிக விவரங்கள் அலுவலகத்தில்

Microsoft Certified Systems Engineer
பரீட்சைகள் யாழ்ப்பாணத்தில்
★ குறுகியகால நிறைவான வகுப்புக்கள்
★ Microsoft நிறுவன அதிபர் Bill Gatesஇன் கையொப்பத்துடன் கூடிய சர்வதேச தர சான்றிதழ்
★ Network Manager, System Admin., System Engineer போன்ற வருமானம் கூடிய வேலைவாய்ப்பு
★ வெளிநாட்டு விசாவிற்கான மேலதிக புள்ளிகள்
புதிய பிரிவுகள் ஆரம்பம் 22.01.08
08 a.m. (Poya Day)
மாணவர் விருப்பிற்கு மேலதிக வகுப்பு நேரங்கள்
பதிவு செய்வோருக்கு விசேட சலுகைகள்
விபரங்கள் நேரில்
324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்
MGS
Supported By UNDP/JRRP

A/L பௌதிகவியல், இணைந்த கணிதம்
பிரபல கல்லூரிகளில் மேற்படி பாடங்களை சிறப்பாகக் கற்பித்து அனுபவம் பெற்ற ஆசிரியரினால் ஏராளமான பயிற்சிகளுடன் (20 வருட வினாத்தாள் உட்பட) தனிப்பட்ட முறையிலும், சிறு குழுக்களாகவும் பௌதிகவியல், இணைந்த கணிதம் கற்பிக்கப்படும். மீட்டல் பயிற்சியும் உண்டு. பௌதிகவியல் பகுதி 1இற்கான ஏராளமான பயிற்சி விடைக் குறிப்புகளுடன் செய்து முடிக்கப்படும். வகுப்புகள் நடைபெறுகின்றன. சந்திப்பு தினசரி 3 மணிக்குப் பின்பு
T.P.: 0776648751
ஆசிரியர்:-R.பாலசுப்பிரமணியம் B.Sc.(Cey.) ,Dip. in Ed.
42/1, இந்துக் கல்லூரி ஒழுங்கை, நீராவியடி, யாழ்ப்பாணம்.
(கடையிற் சாமியார் வீதிக்கு முன்னால் உள்ள ஒழுங்கை).

மதுரம் இன்ஸ்ரிரியூட்
கட்டைப்பிராய்
சிங்கள வகுப்புகள்
K.R.நரி
திங்கள், புதன் -4 p.m
ஆங்கில வகுப்புகள்
K.K.வாசவன்
சனி, ஞாயிறு -3 p.m

மீண்டும் விடுதலைப் பெருவிழா
இலவசம்! இலவசம்!
கவலை, கண்ணீர், தீராத வியாதி, பிசாசின் பிடி, பில்லி சூனியக்கட்டு, கடன் பிரச்சினைகள் பரம்பரைச் சாபங்கள் ஆகியவற்றிலிருந்து
இயேசு விடுதலை கொடுக்கிறார்
★ வாருங்கள் வந்து விடுதலை பெறுங்கள்
இடம் :- நெல்லியடி மத்திய கல்லூரி மைதானம்
காலம் :- தை -18 ஆம், 19 ஆம், 20 ஆம் திகதிகளில்
நேரம் :- தினமும் பி.பகல் 2.30 மணிக்கு
இந்நிகழ்வில் "அன்பான இயேசு ஜீவ கீதங்கள்" பாடிய சகோ.N.பத்மதேவனின் சாட்சிப் பாடல்கள் நிகழ்வும் இடம்பெறும்
கடந்த விடுதலைப் பெருவிழாக் கூட்டங்களில் கட்டிகள் மறைந்து, புற்றுநோயாளிகள் அற்புத சுகமடைந்து இன்னும் பலர் பல்வேறுபட்ட பிரச்சினைகளிலிருந்து விடுதலையடைந்தார்கள்.
தொடர்புகளுக்கு:- தொ.பே.எண் - 021 222 6730
நாற்சதுர சுவிசேஷ சபை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 20.01.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.